




பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

சுடர்: 4 சுக்கில ஒளி 10 ஆவணி மீ 26 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 10 (11 - 09 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 240







# டிச. 31ற்கு முன் படையை இந்தியா வாபஸ் பெறும்?

## பெல்கிறேட் பேச்சின்போது காணப்பட்ட இணக்கம் இதுவே!

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, செப்டம்பர் 11

இந்த ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் அமைதிப்படையை வடக்கு-கிழக்கிலிருந்து வாபஸ் பெறுவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்திருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பெல்கிறேட்டில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் சந்தித்துப் பேசியபோது காணப்பட்ட இணக்கம் இதுவே என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அணிசேரா நாடுகளின் 9ஆவது உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக பெல்கிறேட் சென்றிருந்த பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னவும் அங்கு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது தெரிந்ததே.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு, கிழக்கிலிருந்து அமைதிப்படையை வாபஸ் பெறுவது குறித்தும் முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்தப் பேச்சின்போது டிசம்பர் 31இற்கு முன் அமைதிப்படையை வாபஸ் பெறுவதற்கு இணக்கம் காணப்பட்டதாகவும் —

இந்த விடயத்தை இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டதாகவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### துர்க்கை அம்பாளின் ரதோற்சவம்

யாழ்ப்பாணம், செப் 11

பிரசித்திபெற்ற தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானத் தேர்த்திருவிழா இன்றாகும்.

இன்று காலை 9.15 மணிக்கு துர்க்கை அம்மன் தேரில் பவனி வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார்.

காலை ஐந்து மணிக்கு ஸ்நபன அபிஷேகம், பூசை, ஸ்தம்ப பூசை, வசந்த மண்டப பூசை ஆகியன நடைபெற்று 9.15 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வரும் பக்தர்களின் வசதிக்காக விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ-3)

( சிறப்பிதழ் உள்ளே )

### 62 பல்கலைக்கழக மாணவர்கள் காவலில்!

கொழும்பு, செப். 11

தென்பகுதியில் இதுவரை 62 பல்கலைக்கழக மாணவர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று உயர்கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது. (ஒ-எ)

### அடையாளக் கார்ட்டுகளுடன் கைது

கொழும்பு, செப். 11

உடப்புசல்லாவையில் நேற்று 300 அடையாளக் கார்ட்டுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். (இ)

### கோப்பாய் வாசி சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், செப். 11

இருபாலை மாதா கோவிலுக்குச் சமீபமாக நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

கோப்பாயைச் சேர்ந்த நடராசா சசிதாசன் (வயது 18) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

பிரஸ்தாப இளைஞர் நேற்று முன்தினம் காலை தோட்டத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருக்கையிலேயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகச் சொல்லப்பட்டது.

இதேவேளை இருபாலைச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குழு ஒன்றைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். (ஒ-10)

### கரம்பொனில் சூட்டுக்கொலை

கரம்பொன், செபஸ்தியார் கோவிலடியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் ஊர்காவற்றுறை, ஐந்தாம் புலத்தைச் சேர்ந்த எட்வேட் ஏன்ஸ்ட் (வயது 52) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

### துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, செப். 11

பாணந்துறையைச் சேர்ந்த பமுனுகமவில் ஒரு வீட்டில் இருந்து 11 துப்பாக்கிகள் ஒரு சுழல் துப்பாக்கி ஒரு கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் நேற்றுக் கைப்பற்றப்பட்டன. (இ)

### 100 பேர் கைது

கொழும்பு, செப். 11

நேற்று மாலை 4 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் நாடுமுழுவதும் தீவிரவாதிகள் எனக்கருதப்படும் சுமார் 100 பேர் கைதுசெய்யப்பட்டனர். (இ)

### விசேட பஸ் சேவைகள்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்றும், நாளையும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து பயணிகள் எண்ணிக்கையின் அடிப்படையில் விசேட சேவைகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய மாதகல், கீரிமலை உள்ளிட்ட பெரும்பாலான சேவைகளை தெல்லிப்பளை ஊடாக நடத்தவும் வ. பி. போ. சபை ஒழுங்குகளைச் செய்துள்ளது. [அ-9]

### கிளிநொச்சியில் அரசாங்க ஒப்பந்தக்காரர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப். 11

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரபல அரசாங்க ஒப்பந்தக்காரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் கோணாவிலைச் சேர்ந்த சு. கிருஷ்ணபிள்ளை (வயது 55) என்பவர் ஆவார்.

சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-76-163)

### பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, செப். 11

மேற்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மாகாணங்களிலும் உள்ள பாடசாலைகள் இன்று 11ஆம் திகதி முதல் திறக்கப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சு நேற்று விடுத்த அறிவித்தல் ஒன்றில் தெரிவித்தது.

கொழும்பு, கம்பஹா கல்வி மாவட்டங்கள் அடங்கிய மேற்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை எப்போது திறப்பது என்பது குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

### வட்டக்கச்சி பாடசாலையில் மீண்டும் முகாம்

வட்டக்கச்சி, செப். 11

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் மீண்டும் படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பே இம் முகாம் நீக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வட்டக்கச்சி, மம்மில் குளம், இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் அடிக்கடி தேடுதல் இடம்பெறுகின்றன. (ஒ-163)

## அநுராதபுரம் சங்க நாயக்கர் சுட்டுக் கொலை

கொழும்பு, செப். 11

அநுராதபுரம் சங்க நாயக்கர் கேஹுஸ் விமலசிறி தேரர் நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனிடையில் நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று மட்டும் 15 பேர் கொலையுண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## அனைத்து கட்சி மாநாடு பற்றி 4 எதிர்க்கட்சிகள் ஆராயும்

கொழும்பு, செப். 11

அனைத்துக்கட்சி மாநாடு தொடர்பான விடயங்கள் குறித்து இன்று அல்லது நாளை கொழும்பில் நான்கு எதிர்க்கட்சிகள் இணைந்து ஆராய இருக்கின்றன.

ஆதேசமயம் ஐக்கிய சோஷலிச அணியில் அங்கம் வகிக்கும் திரு. வாசுதேவ நாணயக்கார தலைமையிலான நவ சமசமாஜக் கட்சி அனைத்துக்கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் தவறாது கலந்துகொள்ளும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது. [ஒ-1]

## பத்து லட்சம் கலன் கொள்ளக் கூடிய எரிபொருள் தேக்கி வைக்க காங்கேசனில் களஞ்சியவசதி

### அமைச்சர் பெஸ்டஸ் உத்தரவு

காங்கேசன்துறையில் 10 லட்சம் கலன் தேக்கிவைக்கக் கூடிய கொள்கலன்களைக் கொண்ட எரிபொருள் களஞ்சியம் ஒன்றை அமைக்க எரிபொருள் மின்சக்தி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உத்தரவிட்டார்.

ரயில் மூலம் அனுப்புவதிலும் பார்க்க கப்பல் மூலம் எரிபொருள்களைக் கூடுதல் அளவு அனுப்ப முடியும்.

கப்பலில் எரிபொருளை பெருமளவில் அனுப்பினால் தேக்கி வைக்கக்கூடியவசதி இப்போது இல்லை.

அதற்காகவே இந்தக் களஞ்சியம் அமைப்பது அவசியமாகிறது என்று நேற்று முன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தூக்குத் தண்டனை பெற்ற தமிழ் இளைஞருக்கு மன்னிப்பு வழங்கக் கோரி பிரிட்டனில் இயக்கம்

லண்டன், செப். 11

மாலைதீவில் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் 12 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் உட்பட 16 பேருக்கும் அந்தத் தண்டனையைத் தவிர்த்து மன்னிப்பு வழங்குமாறு கோரும் விண்ணப்பம் ஒன்றை இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் மாலைதீவு ஜனாதிபதி மவ்மூன் அப்துல் கயூமுக்கு அனுப்பி வருகிறார்கள்.

"மாலைதீவில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்புக் கோருவதற்கான குழு" என்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் நேற்று வீடு வீடாகத் தேடுதல்!

யாழ்ப்பாணம், செப். 11

கொக்குவில் பகுதி நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது. பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சுமார் 15 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை ஆறு மணியளவில் ஒலிபெருக்கி மூலம் கொக்குவில் பகுதியில் உள்ளவர்களை தலையாளி ஞான வைரவர் ஆலயத்தில் கூடுமாறு அறிவிக்கப்பட்டது.

சபாபதி ஒழுங்கை, கே. கே. எஸ். வீதி, பிறவுன் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆலயத்தில் கூட, வீடுவீடாகத் தேடுதல் இடம்பெற்றது.

பகல் இரண்டு மணிவரை இடம்பெற்ற தேடுதலின் பின்னர் ஆண்கள், பெண்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



நேரத்துக்கு ஒரு ஞானம் வந்து மறைகிறது தான் இப்ப அரசியல்வாதியளுக்கு வரைவிலக்கணமாய்ப் போச்சுது... பாத்தியளே...!

## ஜனநாயக விரோத சக்திகள் ஆட்சிக்கு வந்தால் மிதவாதிகள் அழிக்கப்படுவர்

### அமைச்சர் அத்துலத் முதலி எச்சரிக்கை

கொழும்பு, செப். 11

சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் எதிர்க்கும் சக்திகள் நாட்டின் நிர்வாகத்தை கைப்பற்றுமானால் மிதவாத அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அழிக்கப்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் லலித் அத்துலத் முதலி எச்சரிக்கை விடுத்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் உயர்தொழில் புரிவோர் சங்கம் "பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில்..." என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் அமைச்சர் அத்துலத் முதலி பேசினார்.

அமைச்சர் மேலும் பேசுகையில், "தற்போதைய நெருக்கடி நிலை தீர்க்கப்படுவதை அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் பொது இலக்காகக் கொள்ளவேண்டும்" — என்று குறிப்பிட்டார்.

"நெருக்கடியைத் தீர்க்க நான்கு விஷயங்கள் முக்கியமானவை; சமாதானம், ஜனநாயகம், பொருளாதார முன்னேற்றம், இனஒற்றுமை என்பன அவையாகும். இவை நான்கும் அவசியமானவை;

ஒன்று குறைந்தாலும்

இவற்றில் இரண்டு அல்லது மூன்று பெற்று, ஒன்று குறைந்தால் கூட நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியாது.

தற்போதைய முறையின் பிரகாரம் வெற்றி பெற்றவரே

(8ஆம் பக்கம் பார்க்க)

## கேரதீவு-சங்குப்பிட்டி ஊடாக மன்னாருக்கு நேரடி பஸ்கள்

### இன்று சேவைகள் ஆரம்பமாகின்றன

கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு நேரடி பஸ் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை செய்துள்ளது.

யாழ்-மன்னார் பஸ் கட்டணமாக 20 ரூபா அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.30 மணி, 7.30 மணி, 11.30 மணி நண்பகல் 12.30 மணிக்கு பஸ்கள் புறப்படும்.

மன்னாரில் இருந்து காலை 6 மணி, 7 மணி, 9 மணி, நண்பகல் 12 மணிக்கு பஸ்கள் புறப்படும். (ஒ-10)

### சுபநேரம்

(11 - 9 - 1989)

ஆவணி 26 திங்கட்கிழமை

நக்ஷத்திரம்: உத்தராடம்

சுபநேரம்:

10-33 முதல் 12-03 வரை

ராகுகாலம்:

07-33 முதல் 09-03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஏகாதசி விரதம்

## இன்று ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம் செப். 11

யாழ்-மாவட்டப் பாடசாலைகளை இடையூறின்றி நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக இன்று கொத்தணி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் கோட்டக்கல்வி அதிகாரிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆட்சி முறையை குறை கூறும் அமைச்சர்கள்!

கொழும்பு, செப். 11

தற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி முறை நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தவறிவிட்டது.

அமைச்சர்கள் காமினி திஸநாயக்காவும் லலித் அத்துலத் முதலியும் கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தனர்.

"அனைத்து அரசியல் கட்சிகளும் கொண்ட இடைக்கால காபந்து அரசு அமைப்பதையும் நாம் ஆதரிக்கிறோம். தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேவையானால் அரசியல் சாசனத்தில் பாரிய மாற்றங்களை செய்ய வேண்டும்"—இப்படி இரண்டு அமைச்சர்களும் தெரிவித்தனர். (ஒ எ)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வதிரி, நெல்லியடி - யாழ் வீதியில் பரமானந்தா ஆச்சிரமத்தின் தெற்கு எல்லையாக நீதிமன்றப் பிரிவுதல் உள்ள வீடு கட்டக்கூடிய தோட்டக் காணி 3 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. பஞ்சரட்ணம், இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. (2095)

நல்ல நிலையில் உள்ள பாவித்த சொப்பர் சைக்கிள் (Chopper Bike) விற்பனைக்குண்டு: தொடர்பு: 60 A, கோவில் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்: (2306)

பாவித்த அலுமாரிகள் உட்பட சகல வீட்டுத்தளபாடங்கள் Fridge Gas-Cooker, T. V. மற்றும், மின் உபகரணங்கள் பித்தளை, சில்வர் பொருட்கள் மற்றும் பல விற்பனைக்குண்டு. Supeka 343, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர்: (2141)

Royale தாய்லாந்து நெத்தலிக் கருவாடு புதியது சுத்தமானது 100 கிராம் பக்கட்டுக்கள் விற்பனைக்குண்டு வியாபாரிகளுக்கு சலுகை உண்டு. Chris Marketing organization, 380, Hospital Road, Station Junction, Jaffna: (சி/3661)

மிக நல்ல நிலையில் உள்ள ஆண்களின் HERO சைக்கிள் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: இல; 19, விக்டோரியா ரோட், யாழ்ப்பாணம்: (2137)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்; மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல:02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்: (1551)

மின்சாரம் இல்லாதநேரத்திலும் குழாய்க்கிணறு/ சாதாரண கிணற்றிலிருந்து வீட்டுத் தேவைக்கான தண்ணீர் பிரச்சினையை இலகுவில் தீர்த்து வைக்கின்றது. கைட்ரோ (Hydro) கைப்பம்புகள் வீட்டில் மின்மோட்டர்கள் பொருத்தி வைத்திருப்பவர்கள் அதே பைப்பில் இதைப்பொருத்தி அதிசலாபம் அடையுங்கள்: மேலதிக விபரங்களுக்கு: Vasanthy Electricals 110, K K.S Road, Chunnakam: (சி/3645)

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை பூக்கை கிணவிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீடு, கிணறு, உட்பட 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. ஜெயசூரியர், மெமோறியல் லேன், மானிப்பாய். (2048)

## உடன் விற்பனைக்கு

58, சிவன் வீதி, நல்லூரில் 1½ பரப்புக் காணி கிணறு மலசலகூடத்துடன் உடன் விற்பனைக்குண்டு; தொடர்பு மகேந்திரன் 17 கோவில் வீதி, யாழ்ப்பாணம் அல்லது வின்றோ, மகேந்திரா நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்; (2082)

## விற்பனை குத்தகை

ஸ்ரான்லி வீதி வெலிங்டன் சந்தியில் தொழிற்சாலை Super Market க்கு ஏற்ற 1½ பரப்பு காணியும் கட்டிடமும் சந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் 3 கடைகளும் விற்பனைக்கு உண்டு. அத்துடன் காணிகள் கட்டிடங்கள் வாங்கவும் விற்கவும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். பன்முகமாற்றகம், Dilka மேல்மாடி (பஸ் நிலைய முன்பாக) 202 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்; சந்திக்கும் நேரம் காலை 9 30 — 1 மணி வரை; (சி/3660)

## தேவை

உருக்கு அலுமாரி மேசை செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை நேரில் வரவும் பரமேஸ்வரா என்ஜினியறிங் வேர்க்ஸ், 798 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்; (2139)

B M C. Crown Pinion Wheel 41 Teeth Crank Wheel Pinion 7 Teeth full set தேவை தொடர்பு கொள்ளவும்: Samuel, Sons & Co Ltd; 208, Hospital R.d, Jaffna; (C/3649)

T. V. றேடியோ திருத்தும் நிலையத்திற்கு ஒரு பெண் உதவியாளர் தேவை. சுன்னாகத்தில் வசிப்போர் மட்டும் நேரில் தொடர்பு கொள்ளவும்: Sutha Sound Vision & Time, Nagams Theatre, K. K. S. Road. Chunnakam. (சி/3650)

## Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 89/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்; (சி 3601)

## திருமண சேவை

திருமணப் பொருத்தம் குறிப்புக் கணித்தல், பலன் பார்த்தல் ஆகியவற்றிற்கு எமது சோதிடரைச் சந்தியுங்கள்; தொடர்பு: பன்முக மாற்றகம் Dilka மேல்மாடி, (பஸ்நிலைய முன்பாக) 202/A ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்; சந்திக்கும்நேரம் காலை 9-30—1-00 மணிவரை: C/3659)

## பற்றறிசார்ஜ்

ஜெனரேட்டரின் உதவியுடன சகலவிதமான பற்றரிகளும் 24 மணி நேரத்திற்குள் ''சார்ஜ்'' (Charge) செய்து கொடுக்கப்படும். மெடிக்கல் ஹோல் இல; 224 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/3653)

## கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் சேவல் குஞ்சுகள் (cobb) புரொயிலர் குஞ்சுகள் (13-9-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க: இல. 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (2075)

## தேவை

கிளிநொச்சிப் பகுதியில் தனியார் ஸ்தாபனத்திற்கு அனுபவமிக்க மின் இணைப்பாளர்கள், மின்மோட்டார் வைன்டேஸ், வெல்டேஸ் உடன் தேவை. திறமைக்கேற்ப சம்பளம், இடவசதி வழங்கப்படும் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்; செ. செல்வரத்தினம், பொறுப்புனர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன். (2302)

## திருமண சேவை

சைவமணமகன்கள் Engineer, Doctor ஆசிரியர் தரத்தில் தேவை: சைவ மணமகன்கள் எல்லாத் தொழில்களிலும் எல்லா வயதிலும் தேவை; கோவியகுல 36 வயதிற்குட்பட்ட மணமகனும், கிறிஸ்தவர் 33 வயதுக்குட்பட்ட மணமகளும் தேவை. நாடார் இன, வணிகர் குல மணமகளும் தேவை: இரண்டாம் தாரம் மணம் செய்ய விரும்புவோரும் தொடர்பு கொள்க; பன்முகமாற்றமும் Dilka மேல்மாடி, பஸ்நிலைய முன்பாக, 202A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/3658)

## தவறிவிட்டது

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் மயில்வாகனம் ஆகிய எனது அடையாள அட்டை (363120601 V) நிவாரணப் பணம் பெறும் அறிமுக அட்டை; கைப்பை என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (2305)

## இலவசம்

துர்க்கை அம்மன் கோவில் முன்வாசலில் அமைந்துள்ள எமது விளம்பர நிலையத்தில் அன்னக்கோப்பியை வாங்கி துர்க்கை அம்மன் விரிக்கர் கொப்பியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள் அத்துடன் நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் வெற்றுப் பைக்கற்றுக்களைக் கொடுத்து ஒரு ரம்ளரையும் பெற்றுக் கொள்ளுங்கள். (சி/3654)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் 13ஆம் திகதி புதன்கிழமையும் Christombu Farm புரொயிலர் குஞ்சுகள் 14ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில்; (2089)

## 93 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 12 - 08 - 1915

உதிர்வு: 11 - 06 - 1989

அமரர்

### கோவிந்தபிள்ளை கனகராசா (குணம்)

அப்பா நீங்கள் அன்பின் சிகரமாய்
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அயலவர், சுற்றத்தார், நண்பரின் நலம் காத்தவராய்
எல்லோர்க்கும் கடமைசெய்து நம்மோடு வாழ்ந்தீர்கள்
உங்கள் கலகலப் பானபேச்சும்
சிரிப்பொலியும் நம்வீட்டில் நித்தம் ஒலிக்குதப்பா
எம்மைப் பண்போடும் பாசத்தோடும் வளர்த்து
பரிதவிக்க விட்டுச் சென்றீர்கள்
உங்கள் நினைவுகள் நம்மைவிட்டு நீங்காதப்பா
உங்க ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்;
அப்பாவின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு
எமக்கு உதவிய யாவர்க்கும் நமது மனமார்ந்த
நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

16/25, சிவன்கோவில்வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்;

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, மகள், மகன், மருமகன்

(2133)

---

வன்செயல்கள், இராணுவ நடவடிக்கைகளில்

# கடமை நேரம் தவிர்ந்த வேளை பாதிக்கப்பட்டாலும் நஷ்டஈடு!

யாழ்ப்பாணம், செப்; 11 ஆசிரியர்கள் உட்பட சகல அரசாங்க ஊழியர்களுக்கும், அவர்கள் கடமை தவிர்ந்த ஏனைய நேரங்களில் வன்செயல்கள் அல்லது இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டாலும் கூட நஷ்டஈடு வழங்கப்படும்.

அதற்கேற்ற விதத்தில் வன்செயலால் பாதிக்கப்படும் அரச ஊழியருக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக ஏற்கனவே அரசு எடுத்த முடிவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் நடந்த அமைச்சரவைக் கூட்ட முடிவின் பிரகாரம் முந்திய விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது;

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் அரசாங்க சேவையிலுள்ள ஆசிரியராயினும் அல்லது ஏனைய ஊழியராயினும் கடமையில் ஈடுபட்டுக் கொண்டோ அல்லது கடமையில் ஈடுபடாமல் இருக்கும் போதோ வன்செயல் நடவடிக்கைகளினால் மரணமடைந்தால் அல்லது காயமுற்றிருந்தால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்

முன்னர் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்ட நஷ்டஈடு வழங்குதல் தொடர்பான சுற்று நிருபத்தில், அரச ஊழியர் கடமையிலுள்ள போது வன்செயலால் பாதிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது;

கடமை நேரம் தவிர்ந்த நேரங்களில் வன்செயல் அல்லது இராணுவ நடவடிக்கை காரணமாக இறக்கும் அல்லது காயமுறும் ஆசிரியர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு த. மகாசிவம் பொது நிர்வாக அமைச்சிடம் கோரியிருந்தார்;

இதன்பிரகாரம் 1983 ஜூலை 23 க்குப் பின் நடைபெற்ற வன்செயல்கள், இராணுவ நடவடிக்கைகளில் பாதிப்படைந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், ஏனைய அரச ஊழியர்களும் நஷ்டஈடு பெறும் வாய்ப்பைப்பெற்றுள்ளனர்;

கடமையில் இல்லாதவேளையில் பாதிப்படைந்த ஆசிரியர்கள் இதுவரை காலமும் எதுவித நஷ்டஈடும் பெறமுடியவில்லை;

இவர்கள் சார்பில் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் விடுத்த கோரிக்கை ஒன்றின் பேரில் அமைச்சரவை தனது முடிவை மாற்றி அமைத்துள்ளது; (இ-ரி)

## பிரிட்டிஷ் அதிகாரிகள்

கொழும்பு, செப் 11 மலையகத் தோட்டங்களில் வளர்ச்சிப்பணிகளில் ஈடுபட்டு வரும் ஐந்து பிரிட்டிஷ் அதிகாரிகளில் நால்வரைத் தாயகம் திரும்பும்படி பிரிட்டிஷ் தூதரகம் கேட்டுள்ளது.

கொலைகள், சண்டைவெடிகள் மத்தியில் எமது பிரசைகள் உயிரைப் பணயம் வைத்து வேலைசெய்ய நாம் அனுமதிக்க முடியாது—இப்படி பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்; (க-எ)

## மிகக் குறைந்த நெல் விளைச்சல்

கடந்த 12 வருடங்களில் இந்த ஆண்டே ஆகக்குறைந்த நெல்விளைச்சல் ஏற்பட்டிருப்பதாக விவசாய; உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஆக9 கோடி 90லட்சம் புசல்நெல் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது,

1984இல் 12 கோடி 70 லட்சம் புசல் நெல் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது;

1978இல் நெல்உற்பத்தி 10 கோடி 10லட்சமாக இருந்தது;

## அஞ்சல் அதிபர் எழுது வினைஞர் ஒரே சேவையில்

கொழும்பு, செப்:11 தபால் சேவை எழுதுவினைஞர்களும், அஞ்சல் அதிபர்களும் ஒரே சேவையில் சேர்த்துக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

தபால் திணைக்களத்தின் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இவ்விரு சேவைகளையும் ஒன்றிணைப்பதாக சுற்றறிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது;


## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா

1. அம்புலன்ஸ் றைவர் ஐந்து வருட சேவிஸ் செட்டிபிக்கேற்றுடன் தொடர்பு கொள்ளவும்
   ★ 7 வேலையாட்கள் தேவை
   ★ சம்பளம் 750 — 1000 SR
2. கொன்பிற்றல் கிளினேஸ் கம்பனி
   ★ 50 mc சம்பளம் 400 SR
3. எலெக்றிசன் ஐந்து பேர் வேலையாட்கள்
   ★ உடன் தேவை சம்பளம் 800 SR
4. காப்பென்ரஸ் 6 பேர் உடன் தேவை
   ★ சம்பளம் 600 — 100 SR
5. மேசன் ஆறு பேர் தேவை
   ★ சம்பளம் 600 — 100 SR
6. நேர்ஸ் பெண்கள் 10 பேர் உடன் தேவை
   ★ சம்பளம் 400 — 100 SR

குவைத்

1. எயாப்போட் கிளினேர்ஸ் வேலையாட்கள் உடன் தேவை
   ★ சம்பளம் 35 — 5 KD

அபுதாபி

1. கிளினேர்ஸ் வேலையாட்கள்
   ★ 5 பேர் உடன் தேவை
   ★ சம்பளம் 650 SR

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நியூயோக் ரவல்ஸ்
கே கே. எஸ் வீதி, மல்லாகம்.
[2313]

C. I. A. (ACCOUNTANCY)
London June 1990 Exam

| | | |
|---|---|---|
| Basic Accounting | — | Mr. D. Gnanaseelan |
| Communication | — | Mr. S Narendiran |
| Business Adminstration | — | Mr. S Narendiran |
| Numeracy and Statistics | — | Mr. S. Thilakakumar |
| Computer Applications in Accounting | — | Mr. D. Gnanaseelan |

ஆரம்பம்: 18 - 09 - 1989

G.C.E (ord) Level தேற இயலாதவர்களான வகுப்பு
இப்பயிற்சி நெறியின் மூலம்
C.I.M.A. (I.C.M.A) தேறவாய்ப்புண்டு

உங்கள் பதிவுகளுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane, Hospital Road, Jaffna.
(சி/3656)


HONDA MOTOR BIKES & GENERATORS
AVAILABLE
CONTACT:
MASTERS
16, 3rd, Cross Street, Jaffna,
(சி/3662)

Diploma In Nursing
(தாதிப்பயிற்சியில் டிப்ளோமா)
பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
★ பிரபல தகுதிபெற்ற விரிவுரையாளர்கள் குழு
★ வெளிநாடு செல்ல உகந்ததாக இலகு பயிற்சி நெறி
உங்கள் பதிவுகட்கு:
North Ceylon Technical Institute
14 St Peters Lane, JAFFNA.
(சி 3655)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும்

11 — 09 — 1989



### திரு. நாகமணி நாகலிங்கம்

என்றும் எம் குடும்பத்தில் ஒளி விளக்காய் திகழ்ந்து எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக எம் அன்புத் தெய்வமாய் பாசத்துடன் திகழ்ந்த நாகமணி நாகலிங்கம் 12 - 08 - 89 இல் சிவபதம் எய்தினார்;

அவரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் ஆறுதல் அளித்து எமக்குப் பல உதவிகள் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்;

இங்ஙனம்
வடிவேலு நாகமணி

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்;

(1937)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

தொடிப் புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்.

**பொருள்:**

ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும் படி உழுது காயவிட்டால், ஒருபிடி எருவும் இடவேண்டாமல் அந் நிலத்தில் பயிர் செழித்து விளையும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24605, 23078
யாழ்ப்பாணம்.
11 09 1989

# வீண் விரயத் தடுப்பு

அரசாங்க அலுவலகங்களில் ஏற்படும் வீண்விரயம் தாமதங்கள் என்பனவற்றைத் தவிர்ப்பதற்கு, நீக்குவதற்கு உயர்மட்டத்தில் புதிதாகப் பல வழிமுறைகள், ஒழுங்குவிதிகள், கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. வீண்விரயத்தைத் தடுப்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு துணை அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருக்குக் கீழ் வீண்விரயத் தடுப்புச் சம்பந்தமான அலுவல்களைக் கவனிக்கத் தனியான பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களில் வீண்விரயம் என்பது பல வருடத்துப் பிரச்சினை. அரசாங்கச் சொத்து என்றால் பாதுகாக்கத் தேவையில்லை. சிக்கனமாகப் பாவிக்க வேண்டியதில்லை. அரச ஊழியர் ஒருவர் அவற்றை எடுத்துச் செல்வதைக் கேட்பது யார்? அடுத்தவர் செய்கிறார், அதனால் நானும் செய்கிறேன்; காகிதாதிகள் போன்றவற்றை எண்ணுக் கணக்கில்லாமல் எப்படியாவது செலவிடலாம்; வீட்டுக்கும் கொண்டு செல்லலாம்; நானும் அரசாங்க ஊழியன்; அதிகாரியும் அரசாங்க ஊழியன். என்னைக் கேட்க அவர் யார்? அலுவலகத்தில் இருப்பது அவர் வீட்டுச் சொத்தா? அரசாங்கச் சொத்துத் தானே — இவை அரச அலுவலகங்களின் இயல்பு நிலையும், அரச ஊழியரின் மனோநிலையும் ஆகிவிட்டன. நீண்ட காலப் 'பாரம்பரியமும்' பழக்கமும் ஆகிவிட்டன.

அரசாங்கச் சொத்துக்கள் மக்களுடையன. பாட்டாளி முதல் பணக்காரன் வரை செலுத்தும் கட்டணங்கள், சேவைப்பணம், வரிப்பணம் என்பனவற்றைக் கொண்டே அவை வாங்கப்படுகின்றன. மக்கள் நாயகர்கள். ஆட்சியாளரும், அரச ஊழியரும் அவர்களின் சேவகர்கள். அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்துச் செலுத்தும் வெவ்வேறு ரூபத்தில் உள்ள கொடுப்பனவுகள் மூலம்தான் அரசாங்கத்துக்குப் பணம் கிடைக்கிறது. அந்தப் பணமே அபிவிருத்தித் திட்டங்கள் முதல் அலுவலகக் காகிதாதிகளுக்கு வரை செலவிடப்படுகிறது. ஆகையால் அரசாங்கச் சொத்து சும்மா வந்ததல்ல அல்லது வானத்திலிருந்து இலவசமாகப் பொழியப்பட்டதும் அல்ல.

இந்த உண்மையை உணர்ந்து கொண்ட அரச ஊழியர்கள் மிகச்சிலரே. அரச ஊழியரில் பலரும் தாமே மக்களின் நாயகர்கள் என்று நினைக்கிறார்கள். மக்களுக்குப் பணிபுரிய வந்த ஊழியர்கள் என்பதை மாற்றி அமைக்கிறார்கள். ஒரு நாளில் ஒரு வேளைப் பொழுதில் செய்து முடித்துக் கொடுக்கக் கூடிய அலுவலை, ஒரு மாதத்துக்கும் மேலாக இழுத்தடித்து மக்களை அலைக்கழிக்கிறார்கள். அவர்கள் மீது குதிரைச் சவாரி விடவும், சில சந்தர்ப்பங்களில் மக்களின் தலைமேல் ஏறிக் குந்தவும் முயல்கிறார்கள்.

அரசு மக்களுக்காகவே அரசாங்க சேவையும் அவர்களுக்காகவே. அரசாங்கச் சொத்துக்கள் மக்களுடையவை. அவை விரயம் செய்யப்படுவதற்கோ அல்லது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கோ உரியவை அல்ல. மக்கள் தேவையை ஒட்டி அதற்காக மட்டுமே பாவிக்கப்படவேண்டியவை. சொந்தச் சொத்துப் போலச் சிக்கனமாகப் பயன்படுத்தப்படவேண்டியவை. —இந்த உணர்வு அரசாங்க ஊழியர்களுக்கு வரவேண்டும். அதனை அவர்கள் ஒவ்வொருவரும் தாமே உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு உணர்ந்து கொள்ளத் தவறும் பட்சத்தில், உணர்த்தப்படுவது தான் மாற்று வழி. வீண் விரயம் செய்வோரைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். வீண் விரயம் செய்வோருக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பனவற்றை நிறுத்தி உணரவைக்கும் தண்டனைகளை வழங்க வேண்டும். விரயம் என்ற மேற்போர்வையில் மக்கள் சொத்தை ஏப்பம் விடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களின் சொந்தச் சொத்துக்களை சுவீகரிக்க வேண்டும்.

ஆனால் ஒன்று, அரச ஊழியர்களே உணர்ந்து கொள்ளவில்லை என்றால், அவர்களை உணரச் செய்வதற்கான நடைமுறைகளைக் கையாள்வது யார்? பூனைக்கு மணி கட்டுவது யார்? வேலியே பயிரை மேயும் நிலையைக் கண்காணிப்பது; கட்டுப்படுத்துவது, தடுப்பது எவ்வாறு என்ற நிலை எழுகிறது.

சிற்றூழியரை அவருக்கு மேல் உள்ளவரும், எழுதுவினைஞரை பிரதம லிகிதரும், பிரதம லிகிதரை, நிர்வாக அதிகாரியை அவருக்கு மேல் உள்ள உயர் அதிகாரியும் கட்டுப்படுத்துவதற்கு முன்னர், தண்டிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் வீண்விரயத்தைத் தடுக்க முன்னுதாரணமாக நடந்து கொள்ளவேண்டும். அது நடந்தால் வீண் விரயம் தானாகவே தடுக்கப்பட்டுவிடும்.

## யாழ் கோட்டக்கல்வி பிரிவு

# அதிபர், உப அதிபர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி

யாழ். கோட்டக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட அதிபர்கள், உப - அதிபர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிர்வாகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளிலேயே இப்பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

உயர்தர, கனிஷ்ட, ஆரம்ப பாடசாலைகளுக்கு மூன்று கட்டமாக இப்பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சியை இம்மாதம் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [த-3]

## பாத்திரங்கள் அன்பளிப்பு

பசிலைப்பளி, செப். 11

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அண்மைய அனர்த்தங்களின் போது பாதிப்படைந்தவர்களுக்கு சமையல் பாத்திரங்கள் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி செயலக அதிகாரிகளால் வழங்கப்பட்ட இப்பொருள்களை இயக்கச்சி, மாசார், புதுக்காடு, புலோப்பளை, பளை, முகமாலை, இந்திராபுரம், செல்வபுரம் உட்பட பலகிராம மக்கள் பெற்றுக் கொண்டனர். (க-117)

## மாதிரிப் பாலர் பாடசாலை

தாளையடி, செப். 11

வடமராட்சி கிழக்கில் மாதிரிப் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தால் அமைக்கப்படும் இப்பாலர் பாடசாலைக்கு கட்டடதளபாட வசதிகளும் மற்றும் சிறுவர்களுக்கான நூல் நிலைய வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது. (க-144)

## கொள்ளை

மட்டக்களப்பு, செப். 11

மாலை ஐந்து மணிக்கு பின்பு வியாபாரம் செய்யக் கூடாது என எச்சரிக்கை விடுத்த ஆயுத கோஷ்டி ஒன்று அன்றிரவு வியாபார நிலையத்தில் கொள்ளை அடித்தது.

இச் சம்பவம் அண்மையில் மட்டக்களப்புப் பகுதியில் மதுவிற்பனை நிலையமொன்றில் நடைபெற்றது. (க-21)

★ முருகண்டிப் பகுதியில்

# தொற்று நோய் பரவும் அபாயம்

சேமமடு, செப். 11

முருகண்டிப் பகுதியில் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

முருகண்டியில் பொது மலசலகூடங்கள் தண்ணீர் இன்றிப் பாவிக்கப்படுவதில்லை.

தனிப்பட்ட ஒரு சிலரால் கட்டப்பட்ட மலசல கூடங்களும் பாவியாது பூட்டப்பட்டுள்ளன.

இதனால் முருகண்டிக்கு வரும் பிரயாணிகள் சுற்றுப்புறக் காடுகளிலும் அயல் பிரதேசங்களிலும் இயற்கைக் கடனைத் தீர்த்துக்கொள்கின்றனர்.

இதன் தாக்கங்களை அயல் பிரதேசத்திலுள்ள மக்கள் வெகு விரைவில் அனுபவிக்க நேரிடும் எனச் சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் தனது குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது.

முருகண்டியில் இவ்வருடம் இன்னும் பருவமழை பெய்யத் தொடங்கவில்லை.

சென்ற வருடமும் மழை போதியளவு பெய்யவில்லை.

இதனால் முருகண்டியில் மனிதக்கழிவுகள் அகற்றப்படாது இருக்கின்றன. பருவமழை பெய்யும்போது இக்கழிவுகள் மழைத் தண்ணீருடன் அள்ளிச் செல்லப்பட்டு அயற்பிரதேசக் குளங்களை அடைய இருக்கின்றன.

இவ்வாறு நடக்கும் பட்சத்தில், இத்தண்ணீரை உபயோகிக்கும் மக்கள் மத்தியில் வாந்திபேதி, போன்ற நோய்கள் ஏற்படலாம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-87)

## ஆறுமைல் இடைவெளியில் இப்படி ஓர் ஒளி வித்தியாசம்!

சேமமடு, செப் 11

ஆறு மைல்களில் தான் எவ்வளவு வித்தியாசம்!

ஓர் இடத்தில் ஒளிப் பிரகாசம் துலங்குகிறது. ஆறு மைல் தொலைவில் உள்ள அடுத்த இடத்தில் இருள் மண்டிக் கிடக்கிறது.

இருள் மண்டிக் கிடக்கும் பகுதியைச் சேர்ந்தவர்கள் தங்கள் பகுதி எப்போது ஒளிமயமாகும் என்று ஏங்குகிறார்கள்.

மின்சார வசதி இல்லாமல் இருளில் மூழ்கி இருப்பது வவுனியா நகரம். அங்கிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள (மதவாச்சிப் பாதையில் அமைந்திருக்கும்) புனைவ, குடிக்கொல்லாவ ஆகிய பகுதிகளில் மின்சார வசதி உண்டு.

ஆறு மைல் தூரத்தில் இப்படி ஒரு ஒளி வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் எதுவோ என்று தமிழ் மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

வவுனியா தமிழர்கள் வாழும் பிரதேசம் என்பதால் புறக்கணிப்பா? அந்தப் பக்கம் ஏறெடுத்துப் பார்க்க எவருமில்லையா? என்று ஏக்கத்துடன் கேட்கிறார்கள். (அ-37)

## வயோதிபர்கள் விடுவிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை நயினாதீவில், நாவலர் மடத்தில் இருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வயோதிபர்கள் நேற்றுமுன்தினம் மாலை விடுவிக்கப்பட்டனர்.

எனினும் இளைஞர்கள் சிலர் இன்னும் விடுவிக்கப்படவில்லை. (ஓ 160)

## நியமிக்குக!

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு நிரந்தரமாக ஓர் உதவி அரசாங்க அதிபரை நியமிக்கும்படி நெடுந்தீவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் யாழ். அரசாங்க அதிபரைக் கோரியுள்ளன.

தற்போது பதில் உதவி அரசாங்க அதிபராக, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. சிவரத்தினம் கடமை புரிந்து வருகின்றார். (க-144)

## வாசகர் திருமுகம்

### மா விலை

வடமராட்சிப் பகுதியில் உள்ள நான்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே 1 கிலோ கோதுமை மா ரூபா 9.40 சதமாக விற்பனை செய்கிறது. ஏனைய மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 1 கிலோ ரூபா 9.65 சதமாக விற்பனை செய்கின்றன. யாழ். உணவுத் திணைக்களம் திருமலையிலிருந்து கோதுமை மா ஏற்றிவரும் லொறிக் கூலியை வழங்குவதற்கு உத்தரவாதம் அளித்திருந்த போதும் ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவின் விலையைக் குறைக்காமல் இருக்கின்றன. இது விடயத்தில் உணவுத் திணைக்கள உயர் அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?

என். ஆர். நாதன்
உடுப்பிட்டி.

### ஏன் இந்த வித்தியாசம்?

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் மற்றும் யாழ்நகரிலுள்ள கூட்டுறவுச் சங்கக்கிளைகளிலும்ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை ரூபா 7/06க்குப் பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ள முடிகின்றது. ஆனால் நீர்வேலி கூட்டுறவுச் சங்கக் கிளைகள் எல்லாவற்றிலும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 8/50க்கு விற்கப்படுகின்றது.

நா. பரமலிங்கம்
நீர்வேலி வடக்கு.

# மேலதிக - சிரேஷ்ட பதவிகள் ஒழிப்பு

அரசாங்க சேவைகளில் இதுவரை இருந்து வந்த 'மேலதிக', 'சிரேஷ்ட' போன்ற பதவிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலகங்களிலுள்ள மேலதிக அரசாங்க அதிபர் பதவிகள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களில் உள்ள சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிகள் என்பனவே ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளை இதுவரை வகித்து வந்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன், அதிகாரிகள் பற்றாக்குறையான இடங்களுக்கு இடமாற்றமும் வழங்கப்பட்டுள்ளது. (இ-9)

## விமரிசையாக நடந்தது

குருநகர், செப். 11

யாழ் ஆஸ்பத்திரி வீதி அடைக்கலமாதா ஆலய வருடாந்த நவநாள் திருநாள் 8ஆம் திகதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தை வண. பிலிப் பொன்னையா அடிகளால் கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெற்றன. (ஓ-51)

# வவுனியா விவசாயக்கல்லூரி 27ஆம் திகதி ஆரம்பமாகும்

வவுனியாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி விவசாயக் கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாண காணி, விவசாய அமைச்சு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் கல்லூரியைத் திறந்து வைப்பார்.

கல்லூரியின் அதிபராக திரு. என். இராஜதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

விரிவுரையாளர்களாக திருவாளர்கள் பொ. ஆழ்வாப்பிள்ளை, எஸ். விக்னேஸ்வரன், கே. செல்வநாதன், என். கேதாரநாதன். செல்விகள் கலையரசி சின்னையா, ஜெயக்குமாரி சிவலிங்கம், லலிதகுமாரி நல்லதம்பி, சசிப்பிரபா கந்தசாமி, ஆனந்தினி கணபதிப்பிள்ளை, அம்பழகி ஜெயபாலசிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வடக்கு, கிழக்குமாகாண காணி, விவசாய அமைச்சில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் திரு. எஸ். சிவதாசன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கடிதங்கள் விரைவில் அனுப்பப்படுமென்றும் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களும் இம்மாதம் 23 ஆம் திகதி வவுனியா விவசாயக் கல்லூரி விடுதிக்கு சமுகமளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஓ-க-150)

# மனிதாபிமானி மகாகவி பாரதியார்

## இன்று அவரது நினைவு தினம்

இன்று செப்டெம்பர் 11 ஆம் திகதி பாரதியார் நினைவு தினம் ஆகும்.

பாரதியார் உலக மகாகவி; இந்தியாவின் ஒற்றுமைக்காகப் பாடிய இணையற்ற தேசபக்த கவி; சொந்தமொழியாம் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருந்தகாலத்தில் தமிழ்ப் பற்றூட்டிய மொழிப்பற்று மிக்க ஒரு கவி. அவர் சுதந்திரத்திற்குக் கீதமிசைத்த கவிக்குயில்; உரிமைக் குரலெழுப்பிய மனிதாபிமானி; பாரதி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்று பெண்கள் விடுதலைக்கும்மி இசைத்த வீரக்கவி; பாரதி வானகம் இங்கு வந்திடல் வேண்டும் என்று பக்திப் பாடல்கள் பாடிய புரட்சிப்பாவலன்.

பாரதியைப்பற்றி இப்படியே எத்தனையோ கோணங்களில் இருந்து முடிவே இல்லாது பாராட்ட முடியும். தமிழர் தவப்பயனாய் 20 ஆம் நூற்றுண்டில் கவிமழை பொழிந்த பாரதியை மேற்குறிப்பிட்ட விஷயங்கள் ஒவ்வொன்றினதும் கூட்டுமொத்தமாகப் பார்த்துத்தான் ஆராயவேண்டும், ரசிக்கவேண்டும்.

மகாகவிசுப்பிரமணியபாரதியார் ஒரு பூரணமனிதன்; உலகம் முழுவதையும் உலக மாந்தர் அனைவரையும், ஏன் உலகில்வாழும் காக்கை, குருவி போன்ற ஜீவராசிகள் அனைத்தையும், அதற்கும் மேலாக முழுப்பிரபஞ்சத்தையுமே நேசித்த ஒரு தன்னிகரில்லாத மனிதாபிமானி அவர். உண்மையில் அவருடைய கவிதைகளில் காணப்படும் நேச அபிமானத்தை வருணிப்பதற்கு பிரபஞ்சபிமானி என்று சொல்லவேண்டும்.

பாரதி சுதேசத்திற்கு இடமின்றி ஒரு சர்வதேசிய வாதி; பாரைக் குலுக்கிய மகத்தான ருஷ்யப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை அது நடந்து ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே 'ஆகாவென்று எழுந்ததுபார் யுகப்புரட்சி' என்று பாடும்



கூர்மையான பார்வையைப் பெற்றிருந்தார் பாரதி. அது மட்டுமல்ல ருஷ்யப் புரட்சிபற்றிய அவருடைய அமரத்துவக் கவிதையில் இப்புரட்சியின் சாராம்சத்தை அவர் மிகவும் தெளிவாகக் கூறியிருந்தார். அந்தக்காலத்தில் ருஷ்யப்புரட்சிபற்றிஇவ்வளவு அற்புதமானகவிதையை உலகில் வேறெந்தக் கவிஞனும் பாடவில்லை என்று துணிந்து கூறமுடியும். இதுபோலவே இன்று சினிமாமூலம் பிரசித்திபெற்றிருக்கும் ''சிந்துநதியின் மிசை நிலவினிலே, சேர நன்னாட்டிளம் பெண்களுடனே......'' என்ற கவிதை போன்ற இந்திய நாட்டின் ஒற்றுமையை மிகவும் உயிர்த்துடிப்பான வாழ்க்கை யதார்த்தங்களுடன் இணைத்துப் பாடிய கவிதை வேறு எந்த இந்திய மொழியிலும் ... இல்லை.

பாரதி தன் கவிதைகள் மூலம் போதித்த தமிழ்ப்பற்று தமிழ் வெறி அல்ல. பாரதியார் தமிழை, தமிழரை, தமிழ் நாட்டை நேசித்த காரணத்தால் மற்றவர்களை வெறுக்கவில்லை.

பாரதியாரின் பக்திப்பாடல்கள் வெறும் பிரார்த்தனைப் பாடல்கள் அல்ல. உலகில் உள்ள மக்கள் நல்வாழ்வு வாழத் துணை புரியத் தமக்கு வல்லமை தரும்படி பாரதியார் கடவுளர்களை வேண்டினார். நாட்டிற்கு நலம் காணவே அவருடைய தெய்வப் பாடல்கள் பிரதானமாக எழுதப்பட்டன.

20 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பாரதியார் பாடிய பெண்விடுதலைப்பாடல்களில் காணப்படும் கருத்துக்கள் இன்றும் புதுமையானவையாக, புரட்சிகரமானவையாக உள்ளன. இதற்கு ஒரு காரணம் பெண்கள் விவகாரத்தில் சமுதாயத்தில் போதிய முன்னேற்றம் ஏற்படாமையாகும். இன்னொரு விஷயம் பாரதியார் மிகவும் முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்ததாகும்.

மகாகவி பாரதியாரின் நினைவைக் கொண்டாடும் இத்தினத்தில் அவருடைய கவிதைகளை நன்கு கற்று வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அதை விடுத்து முழுமையானதொரு பாரதியை அங்கம் அங்கமாகப் பிரித்து ஆனைகண்ட குருடரைப் போல் ஆராய முற்படுவது அறிவுடைமையும் ஆகாது, பயனுள்ளதும் ஆகாது.

வீ. சின்னத்தம்பி

# செயற்கைச் சினைப்படுத்தல் சேவை மீண்டும் ஆரம்பம்

காங்கேசன்துறை, செப் 11

கால்நடைகளின் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் இச் சேவை தடைப்பட்டிருந்தது.

செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் சினைப்படுத்த விரும்புவோர் கால்நடை அலுவலகங்களுக்கு விவரங்களைத் தருமாறு கோரப்பட்டுள்ளனர். (க-68)

## கண்டதும் கேட்டதும்

தீப்பெட்டியின் விலை உயர்ந்து கொண்டே போகிறது.

எமது நினைவுக்கு எட்டும் காலத்திலேயே அதன் விலை 5 சதத்திலிருந்து தற்போது 75 சதத்துக்கு வளர்ந்துள்ளது. இப்பொழுது நிர்ணயிக்கப்பட்ட விலை 70 சதமாக இருக்கின்ற போதும் 75 சதத்துக்கே பொதுவாக விற்கப்படுகின்றது.

தீப்பெட்டி விலை உயர்வு பற்றிக் குறிப்பிடும் போது சில பெரியவர்கள் நடத்தும் தீக்குச்சி விளையாட்டையும் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

பாவனையாளர் வாங்கும் தீப்பெட்டிகளில் போதிய குச்சிகள் இருப்பதில்லை. அரைவாசியில் தான் குச்சிகள் இருக்கும்; இது ஒரு விளையாட்டு!

ஐந்து சதத்தை பாராமல் 75 சதத்துக்கு பாவனையாளர் தீப் பெட்டிகளை வாங்க வேண்டும் என்று விரும்பும் பெரியவர்களே குச்சிகளை எண்ணி எடுத்து இரண்டு பெட்டிகளில் போட்டு விடுகிறார்கள்.

அவர்களுக்கு அது வியாபாரம்; மக்களுக்கு அது... ... ... ... ... ...

— செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி சித்திரத் தேர்ச் சிறப்பு மலர்

## அன்னைஸ்ரீ துர்க்காதேவியை வணங்கி நலம் பெறுவோம்!

### நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை

தெல்லிப்பழை அன்னை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான ரதோற்சவத்தை முன்னிட்டு 'உதயன்' நிறுவன அன்பர்கள் சிறப்புமலர் வெளியிடுவதறிந்து பெருமகிழ்ச்சி. இவர்கள் தொடர்ந்து இன்னோரன்ன தொண்டுகளைச் செய்து வருவது, சைவமும், தமிழும் நனிதே வளரவேண்டுமென்ற பெருநோக்கு அடிப்படையிலுளது என்பது கேற்றம். ஸ்ரீ துர்க்காதேவி அருள் பெற்றுய்ந்தோர் பலர். இதனை ஒட்டிய உண்மைச் சரிதைகள் பல. சக்தி வழிபாடாற்றி அநுபூதி பெற்ற மகான்களின் வரலாறுகளையும் யாம் அறிவோம். சக்தி இன்றேல் சிவம் இல்லை. தாயன்புக்கிணை ஏது? எமது பிழைகளை எல்லாம் பொறுத்தருளுபவள் அன்னை பராசக்தி. சித்த சுத்தியுடனும், ஒருமையுடனும் பயபக்தியுடனும் அவளின் திருவடிக் கமலங்களை இறுகப்பற்றிக் கொண்டால் எமது பாதக மலங்கள் ஒழிந்துபோம். அதி உயர்ஸ்தானம் வகிப்பது ரதோற்சவம். ஆழமான தத்துவார்த்தங்களை உள்ளடக்கிய இப்பெருவிழா காண்பது முன்செய்த தவப்பேறு. இதை உளநிறை தரிசன உபாயத்தால் உணர்ந்து அறிந்து கொள்ளலாம். ஸ்ரீ துர்க்கா தேவித்தாயை மனமொழி மெய்களால் வழுத்தி எல்லோருக்கும் எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறேம்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

— ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய ஸ்வாமிகள்

துர்க்காதேவி வண்ணப் பொற்றேரிலே
பவனி வரும் நன்னாளில்

எமது வாழ்த்துக்களை அனைவருக்கும் வழங்குகின்றேம்

**புதிய உயர்கல்லூரி**

ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்,

துர்க்கையைத் துதிப்போர்க்குத் துன்பமே இல்லை

★

**மல்லிகா கிறீம் ஹவுஸ்**

மானிப்பாய்.

துர்க்கை அம்பாள் சித்திரத்தேரில்
பவனி வரும் நன்னாள்
எம் வாழ்நாளில் பொன்னாள்!
நம் நாட்டவர் மகிழும் திருநாள்
அடியார் அகம் மலரும் பெருநாள்!

**சக்தி பார்மஸி**

கே கே. எஸ். ரேட், சுன்னாகம்.

துர்க்கை அம்மன் சித்திரத்தேரேறும்
காட்சி காணவாரீர்

**மல்ரி - ஒயில்
இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
OIL MILLERS**

காங்கேசன்துறை வீதி,
இணுவில.
(இணுவில் ஆஸ்பத்திரி முன்புறம்)

## எங்கும் செறிந்து பாயும்

## துர்க்கையின் அருட்பிரகாசம்

நம் நாட்டில் தேவி வழிபாடு மிகச்சிறந்து காணப்படுகின்றது. அம்பிகையின் உருவ பேதங்கள் பல. அவற்றை அமைத்துக் கொண்டு வேறு வேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர்.

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாயவள். அமைதியான வாழ்வையும் அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கின்றுள். இவளை உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்றேர் பலர். எவனுக்கு மறுபிறவி என்று ஒன்று இல்லையோ அவனே அம்பிகையை உபாசிக்கும் பாக்கியம் பெற்றவனுவான்.

மகிடாசுரனுல் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பிரமாவிடமும், விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டனர்: ஆங்கு வெளிப்பட்ட சினம் எனும் சக்தி ஒன்று சேர்ந்து உருவெடுத்த வடிவமே துர்க்கை வடிவம் என்று பேசப்படுகிறது.

துர்க்காதேவி சிங்க வாகனத்தில் ஆரோகணித்து, மகிடாசுரனை எதிர்த்துப் போருக்கெழுந்தாள். அவ்வசுரனும் படைகளுடன் போருக்கு வந்தான். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுரசைனியங்கள் அனைத்தையும் அழித்து விட்டது. அசுரன் மகிஷ உருவில் வந்தபோது அவன் செருக்கை அடக்கி, அம்பிகை தனது திருவடியால் அழுத்தி ஆட்கொண்டாள்.



தேவி சதுர்ப்புஜங்களில் சங்கு, சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றைத் தாங்கி நிற்கும் திருக்கோலம் தியானத்திற்கு விருந்தளிப்பதாகும்.

துர்க்காதேவிக்கு ஈழவள நாட்டில் மிகப் பழைமையான தனிப்பெருங் கோயில் அமைந்திருப்பது என்றால் அது யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலுள்ள தெல்லிப்பழையிலேதான் இருக்கிறது: கிழக்குப் பார்த்த சந்நிதியாகப் பிரதானவீதியை நோக்கிய வண்ணம் காட்சி தருவதும், தலவிருட்சங்களாக இலுப்பையும், மாவும், மகிழும், அரசும் அமைந்து விளங்குவதும், ஆகம விதிகளுக்கமைய மூலமூர்த்தியும், பிரகார மூர்த்திகளும் அமைந்து காட்சி தருவதும், பாகசாலை, யாகசாலை, வாகனசாலை, அந்தணர்சாலை, அலுவலகம், திருமுறைமண்டம், பக்தர்கள் விடுதி, திருநந்தவனம், அன்னதான மண்டபம் என்பவற்றேடு இவ்வாலயம் தோற்றமளிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஏராளமான பக்தர்கள் இப்பொழுது இங்கு வந்து அவரவர் இஷ்டபூர்த்திக்கு வேண்டுதல் செலுத்தி, அதனுல் நிவர்த்தியும் பெறுகிறார்கள் என்பது கண்கூடு. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் துர்க்காதேவியின் அருட்பிரகாசம் பிரவாகித்து, ஈழவள நாடெங்கணும் செறிந்து பாய்கின்றது: அன்னையின் அருள்மிகு திருக்கோலத்தினைப் பல்லாயிரம் மக்கள் எழில்மிகு சித்திரத்தேரில் வைத்துத் தரிசித்துப் பயனடைவார்களாக! ★

- செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி -

மலர் தொகுப்பு
எம். பாலகுமார்
(உதயன் சஞ்சீவி விளம்பரப் பகுதி)

துர்க்கை அம்பாள் திருவருளால்
அமைதியும் மங்கலமும் நிலவட்டும்!

**கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு**

பிரயாணிகளுக்கு ஓர் நற்செய்தி!

முற்றிலும் அதி நவீன குளிரூட்டப்பட்ட வர்ணத் தொலைக்காட்சிகள் பொருத்தப்பட்ட பஸ்கள்.

பகல் சேவையில்
ஆசனப் பதிவுகளுக்கு
நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது

★ கொழும்பு
பிள்ளையார்,
No5, லில்லி அவென்யூ,
வெள்ளவத்தை.

★ யாழ்ப்பாணம்
(1) பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(2) R. B புக்கிங்சென்ரர்,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சித்திரத் தேரினிலே துர்க்கா
துரந்தரியின் காட்சி காண வாரீர்
வடம் பிடித்து இழுப்போம் வாரீர்
வணங்கி அருள்பெறுவோம் வாரீர்

சகலவிதமான
● எசன்ஸ் வகைகள் ● கலர்ப்பவுடர்கள்
● கேக் தயாரிக்கும் பொருட்கள்
● பொலித்தீன் வகைகளுக்கு

நாடவேண்டிய இடம்

**ஸ்ரீ மேகலா ரேடர்ஸ்**

இல. 9, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.

ஸ்ரீ துர்க்காதேவி அருள் கிடைக்க இறைஞ்சுகின்றேம்.

**MURUGAN
AUTO HOUSE**

Dealers In Electrical Accessories &
Electrical Contractors
TALLIPPALAI.

தேவியைப் போற்றினுல் தேவைகள் பூர்த்தியாகும்.
★★ ★★ ★★
● Nestles (நெஸில்ஸ்)
● எவரெடி பற்றறிகள் தயாரிப்புகள்
● லிவர் பிறதர்ஸ் தயாரிப்புகள்

இவற்றின் விநியோக முகவர்கள்

**லக்ஷ்மி நாதன்ஸ்**

(Genaral & Hardware Merchants)
தெல்லிப்பளை.

துர்க்கையின் அருளால்
புதுமையும் பொலிவும் நிரம்பட்டும்
வாழ்வும் வளமும் பெருகட்டும்
அன்பும் அறனும் ஓங்கட்டும்
அருளும் பொருளும் சிறக்கட்டும்.

★ அறுசுவை உண்டிகள்
★ குளிர்பான வகைகளுக்கு
யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்

**லிங்கம் கூல் பார்**

(வெலிங்டன் சந்தி)
52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லாமே தானுகி, எதற்கும் அப்பால் நிற்கும் ஆயிரநாமக்காரி தெல்லிப்பளை தாயார், தீமைகளைப் பட்சித்து தூயவரை ரட்சிக்க திருக்கோவில் வீதியிலே தேரிலின்று வருகின்றுள்!



★ அழகுக்கு அழகு செய்யும் அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

**சோபனு ஜுவல்லறி**

116V, கஸ்தூரியார் வீதி, யார்ப்பாணம்.

வையமொடு வானையும் காக்கும் பராசக்தித்தாயே, துர்க்காதேவி அல்லல்பட்டு ஆற்றாது அழும் அடியவர் கண்ணீரை எல்லாம் துடைத்து அவர்க்கு இகபர சுகமருள வேண்டுகின்றேம் - இறைஞ்சுகின்றேம்.

அழகுக்கு
அழகு
செய்யும்
அழகிய
தங்கப்பவுண்
நகைகளுக்கு



**நதியா ஜுவல்லறி**

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
2, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃ தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி சித்திரத்தேர் சிறப்புமலர் ஃ

[11-09-1989]


வற்றாத கருணை வெள்ளம் எப்போதும்
தந்தருளும் துர்க்கா துரந்தரியே
தேர்மீது வருக வருகவென வாழ்த்துகிறோம்.

க. இந்திரலிங்கம் [சந்திரன்]
நிரோஷன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி, காங்கேசன்துறை.
(T. B. வைத்தியசாலைக்கு முன்பாக)

எங்கெங்கு காணினும் சக்தியடா!
எழுகடல் அவள் வண்ணமடா!

சகலவிதமான
✶ ஆங்கில மருந்துகள்
✶ ஆயுள்வேத சரக்குவகைகள்
✶ கோவில் அபிஷேகத் திரவியங்கள்
✶ தினசரி மாலை வைத்தியசேவை

இவைகளுக்கு
சித்தி மெடிக்கல் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
மல்லாகம்.

தேரேறி வரும் துர்க்கை அம்மனின் இன் அருள் நாடி
இறைஞ்சுகின்றோம்:
இ. சுப்பிரமணியம் அன்கோ
இல. 8, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

தேவியைப் போற்றுவோம்
தேறுதலடைவோம்
அசோகா ஜுவல்லர்ஸ்
275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னையின் எழிலில்
அகிலமும் மலர்கின்றது
அண்ணா கோப்பியை அருந்தி மகிழுங்கள்
அண்ணா இன்டஸ்றீஸ்
இணுவில்.

வாழியவள் திருத்தேர்
வளர்க அவள் புகழ்
ப. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

துர்க்கையைத் துதிப்போர்க்கு
துன்பமே இல்லை
நியூ ஈழம் ஜுவல்லறி மாட்
சிவன் கோவிலடி
423, [247] கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.


# அன்னையைச் சரணடைந்து விடிவு பெற்ற அரவிந்தர்

தேவி தரிசனங்கிடைத்த போதெல்லாம் அடியார்கள் விடுத்த கோரிக்கைகள் பல வகையானவை.

ஆனால்......

'அன்னையே! எனது நாட்டு மக்களின் விமோசனத்திற்குப் பாடுபட எனக்கு நெஞ்சுறுதியும், நீண்ட ஆயுளும் தருக'

இறைவி தரிசனங் கிடைத்த போது இவ்வாறு கேட்டவர் 'எனக்கு வாழ்க்கையிலே ஓர் இலட்சியம் உண்டு. எனது நாட்டுக்குப் பாடுபடல் வேண்டும். இவ்வாறு ஆகிப் போனால் என் சேவை என்னுவது?' எனக் கவலைப்பட்டார்.

இவ்வாறு மூன்று நாட்கள் அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபொழுது 'பொறுத்திருந்து பார்' என்ற அன்னையின் குரல் கேட்டது. ஒரு உள்ளுணர்வுக்கு இறைவியின் ஆணைக்குச் செவி கொடுக்கும் உள்ளத்திண்மை அரவிந்தரிடம் அப்போது இருக்கவில்லை.

'உன்னால் சாதிக்க முடியாத, உனது முயற்சியால் ஒடிக்க முடியாத பாசவிலங்கினை ஒடிக்க, இன்று இச்சிறையில் அடைத்து நானே வழிப்படுத்தி விட்டேன்' என்று



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முகப்புத் தோற்றம்

வேறுயாருமல்ல - அரவிந்த அடிகளாரே ஆவர்.

ஒரு தீவிரவாதியாகப் புரட்சி வீரனாக வாழ்க்கையை ஆரம்பித்து சமயவாதியாக, மெய்யியற் சிந்தனையாளனாக, பராசக்தியின் பக்தனாக மலர்ந்த புரட்சியோகி அரவிந்த அடிகளார்.

இந்தியாவில் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக இயங்கி தேசத் துரோகக் குற்றச்சாட்டின் பேரில் கைதாகி விசாரணையை எதிர்நோக்கியிருந்த வேளையில் இறைவியிடத்து நாட்டம் பெருக்கெடுத்தோடியது.

அவர் கைது செய்யப்பட்டதும் மனந்தளர்ந்து போனார். மாதமாகத் தனிமையில் அடைபட்டுக் கிடந்தபோது சொற்ப நாட்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம் ஒன்று அவர் ஞாபகத்திற்கு வந்தது.

எல்லா அலுவல்களையும் ஒதுக்கிவிட்டு, செயற்பாடு

**- வே. வரதசுந்தரம் -**

களிலிருந்து உள்ளத்தாலும், உடலாலும் ஒதுங்கி தனிமையை நாடிச்சென்று உள்ளூரப் பார்த்து அன்னை பராசக்தியின் சிந்தனையில் இரண்டறக் கலந்து விட வேண்டுமென்ற வேட்கை ஏற்பட்டது. எனினும் அந்த அன்னை பராசக்தியின் குரல் கேட்பதுபோல் அவருக்குக் கேட்டது.

அச்சிறைச் சாலை அறையொன்றில் அவரிடம் இறைவி பகவத்கீதை யொன்றினை வழங்கினாள்.

அரவிந்தருக்குப் புதிய தெம்பும் அசையாத இறைநம்பிக்கையும் ஏற்பட்டது. கீதை கூறும் சாதனையை ஒழுக்காருக்க் கொண்டார். கிருஷ்ணபகவான் அர்ச்சுனரிடம் கோரியது என்ன என்பதைச் சிந்தித்தார்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று துணிந்தார். அன்னையைச் சரணடைந்தார் அரவிந்தர்.

இறைவியின் திருவருளால் அவரிடம் சிறைக்காவலர்கள் கருணை காட்டியதும், சிறையிலிருந்த குற்றவாளிகள் அவருக்கு இறைவியாகவே தோன்றியதும், எதிர்பாராத விதமாக விசாரணையின்போது நீதிமன்றத்தில் அன்றைய புகழ்பூத்த வழக்கறிஞர் சித்தரஞ்சன்தாஸ் தோன்றி இவருக்காக வழக்காடியதும், இவர் விடுதலை பெற்றதும் நாம் அறிந்ததே. இவையெல்லாம் திருவருட் குறிப்பினால் இறைவியின் கடாட்சத்தால் நிகழ்ந்தவையாகும். ★


அன்னையின் எழிலில்
அகிலமும் மலர்கிறது
அவளுடைய அருளில்
அன்பர்கள் மலர்கிறது

தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பளை.

தேரேறும் தேவியைப் போற்றிடுவோம்!
MARS COOL BAR
K. K. S. Road,
Tellippalai.

''தேவியைப் போற்றுவோம் தேறுதல் அடைவோம்''
பைசிக்கிள் உதிரிப்பாகங்கள், சாய்ப்பு சாமான்கள்,
பான்ஸி சாமான்கள், பலசரக்கு சாமான்கள்
ஆகியவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கோபி ரேடேர்ஸ்
கே. கே. எஸ். றோட், தெல்லிப்பளை.

அம்பிகையை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்!
சீமாட்டி
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறும் துர்க்கையின் அருள்வேண்டி நிற்கிறோம்!
★ ★ ★
ஜெனட்டென்ஸ் ஹாட் வெயர்ஸ்
ஜெனட்டென்ஸ் இன்டஸ்றீஸ்
கே. கே. எஸ் வீதி, இணுவில்.

சகலகலாவல்லி மாலையை
தினமும் படியுங்கள்
இந்நூலை மில்க்வைற் விளம்பர
காட்சிச்சாலையில் பெற்றுக்கொள்ளுங்கள்
நாளும் நற்பணி செய்திட உங்கள்
ஆதரவை நாடும்
"மில்க்வைற்"

தேரேறும் தேவியைப் போற்றிடுவோம்!
ராஜன் ஸ்ரோர்ஸ்
51, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

துர்க்கை அம்மன் சித்திரத்தேர் ஏறுங்காட்சி காணவாரீர்!
தற்காலத்திற்கேற்ற தங்க நகைகளை
ஆடர் செய்து பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் தலைசிறந்த இடம்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வற்றாத கருணை வெள்ளம் எப்போதும் தந்தருளும்
துர்க்கா துரந்தரியே தேர்மீது
வருக வருகவென வாழ்த்துகிறோம்.
க. செ. கைலாசப்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.


கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
திருமண விழாக்கள்
புதுமனைப் பிரவேசம்
புதுமனைக்கு அத்திவாரமிடல்
முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்
★ அபிஷேகத் திரவியங்கள் ✶ விளைவு சூடம்
✶ சாம்பிராணி ✶ ஊதுபத்தி
✶ வாசனைதிகள்
முதலிய சகல பொருட்களும்
★ சந்தனம் ✶ குங்குமம் ✶ சுத்தமான பசு நெய்
முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில்
மலிவாக எம்மிடம் கிடைக்கும்
சவ்வரிசி, சேமியா, நெல்லிகிறஸ், பாதாம் பருப்பு,
பச்சைச் சந்தனம், சித்த ஆயுர்வேத மருந்துகள்,
கோரோசனை, கஸ்தூரி, குங்குமப் பூ, மருந்துச் சரக்குகள்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன்
வழங்கப்படும்.

தேரேறி வருகின்ற தேவி துர்க்கையம்மனின் இன்னருள் நாடி
இறைஞ்சுகின்றோம்!

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: [illegible]
160, செட்டியார் தெரு, கொழும்பு- 11.
தொலைபேசி: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தம்பிநாயகம் தமிழ்ச்செல்வன் (தினேஷ்)


உனது மக்களுக்காய்
உனது மண்ணுக்காய்
உள்ளத் தூய்மையுடன்
உழைத்த தமிழ் வீரா!
பழுத்த அறிஞன் போல்
பலவகைப் பணிகளை மதிநுட்பத்துடன்
பம்பரமாய்ச் செய்தாய் நீ
உனது ஆற்றல் அழிந்து போனதையா!
எனினும் இலட்சியப் பணி மறவோம்;

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
உருத்திரபுரம் மக்கள்,
ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள்;

உருத்திரபுரம்
1989 09-11

(1859)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
திரு. கதிரேசு நாகலிங்கம்

தோற்றம்: 03 - 09 - 1903
மறைவு: 12 - 08 - 1989

அன்பினால் எமை ஆட்சி செய்து
பண்புகள் பல பாங்குற வழங்கி
எம்மை எல்லாம் வளமுடன் வாழ வழிசமைத்து
எங்களை விட்டுப் பிரிந்த எங்கள்
அன்புத் தெய்வத்திற்கு வாழ்வில் எமக்கு
வழிகாட்டியது போல் மறைவில்
ஆண்டவனுடன் கலந்து தெய்வமாய்
நின்று எமைக் காக்குமாறு வேண்டுகின்றோம்;

11-9 89 இன்று திங்கள் காலை 9 மணி அளவில் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் நாளை (12 -9 - 89) செவ்வாய் வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்;

மக்கள், மருமக்கள், பேரன்மார்,
பூட்டன்மார்;

நவற்கிரி,
புத்தூர்;

(2301)

✶ யாழ். மாவட்ட

# விவசாயத்துறையைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

யாழ்; மாவட்ட விவசாயத் துறையைப் புனரமைப்பிற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 14 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வடக்கு கிழக்கு மாகாண காணி, விவசாய அமைச்சுக்கு வழங்கியிருப்பதாக யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு: ஆ: முருகேசன் தெரிவித்துள்ளார்;

மேற்படி நிதியைப் பயன்படுத்தி பத்து கமநல சேவை நிலையங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது;

98 ஆயிரத்து 700 ரூபா செலவில் வேலணை கமநலச்சேவை நிலையமும்

59 ஆயிரத்து 800 ரூபா செலவில் புங்குடுதீவு கமநலசேவை நிலையமும்;

70 ஆயிரம் ரூபா செலவில் கீரிமலை கமநலசேவை நிலையமும்;

4 லட்சத்து 95 ஆயிரம் ரூபா செலவில் உடுவில் கமநல சேவை நிலையமும்;

65 ஆயிரம் ரூபா செலவில் புத்தூர் கமநலசேவை நிலையமும்;

60 ஆயிரம் ரூபா செலவில் பலாலி கமநலசேவை நிலையமும்;

49 ஆயிரத்து 500 ரூபா செலவில் அம்பன் கமநல சேவை நிலையமும்

ஒருலட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் நல்லூர் கமநல சேவை நிலையமும்;

81 ஆயிரத்து 300 ரூபா செலவில் தொல்புரம் கமநலசேவை நிலையமும்;

3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் உரும்பராய் கமநல சேவை நிலையமும் புனரமைக்கப்படும்;


## ஜேர்மன் - வாராந்தப் பயணம்

(கடவுச்சீட்டுத் தந்து ஒரு வாரத்தில் பயணத்தை மேற்கொள்ளலாம்)

✶ Papua New Guinea
(பப்போ நியூ கினியா) Labourer 1000 USD

✶ சிங்கப்பூர் தாதிமார்
(ஏழு வெற்றிடங்கள் மட்டுமே உண்டு)
பணிப்பெண்கள் — 4800/-

அவுஸ்திரேலியா குழுவின் பயண முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

குறிப்பு: எந்த நாட்டுக்கும் முற்பணம் அறவிடப்படமாட்டாது PASS PORT - BOND உடன் செய்து கொடுக்கப்படும்;

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

### நிரோஷன் என்ரபிறைஸ்

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி  காங்கேசன்துறை
(கி/8610)  (T. B. வைத்தியசாலைக்கு முன்பாக)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி-சபிண்டீகரண அழைப்பும்



திருமதி பராசக்தி கனகரத்தினம்
[பரிமளம்]

மலர்வு 1935-05-29
உதிர்வு 1989-08-12

அன்பின் சிரமாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த்திகழ்ந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்களைப் பிரிந்து நாள் 31 தான் சென்றாலும் எங்களுக்கு அன்புாட்டி, அறிவுரை தந்து, அமுதூட்டி மகிழ்ந்த அந்த பசுமையான நினைவுகள் என்றும் எம் இதயங்களில் நிறைந்திருக்குமம்மா;

உங்கள் ஆன்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திப் போமாக!

கடந்த 1989-08-12இல் தேகவியோகமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியையின் போது நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உற்றழி உதவிபுரிந்தவர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்;

அத்துடன் இன்று (1989-09-11) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், சபிண்டீகரண வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

இங்ஙனம்
திரு: அ: கனகரத்தினம் (கணவர்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்மார்கள்;

புங்குடுதீவு மேற்கு,
புங்குடுதீவு-3

([illegible])





உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான

### கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

ஆரம்பம்: 15 - 09 - 1989 [திங்கள், புதன், வெள்ளி]
பயிற்சிக் காலம்: 3 மாதம்
சேரும் போது செலுத்த வேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம்; குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்; தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்;

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்;

விண்ணப்ப முடிவுத் திகதி 14-09-1989




UNIKCO COMPUTER CENTRE
No: 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)

(C/3640)

## அர்ச்சுனா



கல்வி — முயற்சி — பெருவாழ்வு
சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

### உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டில் மலரும் ஒரேயொரு சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் அர்ச்சுனா

40 பக்கங்கள்

சிறுவர்க்கு பொழுது போக்குடன் அறிவுக்கு உசாத் துணையாக அமைவது அர்ச்சுனா

- சிறுகதை, கவிதை
- அறிவுலக அறிமுகம்
- பிறமொழிக் கதைகள்
- விளையாட்டரங்கு
- நகைச்சுவை
- சித்திரத்தொடர்
- கணிதப் புதிர்

இன்னும் பல அம்சங்கள்...

தமிழ் வாசகர் கரங்களில் மிக மலிவு விலையில் தவழும் ஒரேயொரு சிறுவர் சஞ்சிகை அர்ச்சுனா

சிறுவர் இலக்கிய அறிஞர்கள் ஆர்வலர்களின் படைப்புக்களையும் சிறுவர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது அர்ச்சுனா

விலை - 5/=  ஆண்டுச்சந்தா - 70/=

தபாலில் பெற விரும்புவோர் இத் தொகைக்குக் காசுக்கட்டளை / காசோலை பெற்று, நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்று எழுதி உதயன், த.பெ.இல - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு:

யாழ்ப்பாணத்தில்:
அர்ச்சுனா பணிமனை
2ம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பில்:
முகாமையாளர்
எஸ். ஜி. சி ...

உதயன் - சஞ்சீவ் வெளியீடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● போபேர்ஸ் பேர ஊழல் சம்பந்தமாக

# ராஜீவ்காந்தி ராஜினுமா செய்யத் தேவை இல்லை!

# தமிழக முதலமைச்சர் கருணுநிதி அறிவிப்பு!!

## தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தி. மு. க. ஏற்காது!

திருச்சி, செப். 10

திருச்சியில் தமிழக முதலமைச்சர் கருணுநிதி செய்தியாளர்களுக்கு கடந்த வியாழக்கிழமை பேட்டியளித்தார்.

அப்போது இந்திய அரசியல் பற்றி முக்கிய கேள்விகளுக்கு



கருணுநிதி

திரு. கருணுநிதி பதிலளித்தார்.

போபேர்ஸ் பேர ஊழல் சம்பந்தமாக பிரதமர் பதவியில் இருந்து ராஜீவ் காந்தி விலக வேண்டிய அவசியம் இல்லை என்று திரு கருணுநிதி சொன்ஞர்.

திரு. கருணுநிதி மேலும் சொன்னதாவது;

போபேர்ஸ் பேர ஊழல் குறித்து முன்னுள் இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி கூறிய கருத்துக்களுக்காகப் பதவியை ராஜினுமாச் செய்ய வேண்டிய தேவை ராஜீவுக்கு இல்லை.

அவரைப் பதவி விலகக் கோருவதற்குப் பதில் ராஜீவுக்கு எதிராகப் பிரசார இயக்கம் ஒன்றை தேசிய முன்னணி நடத்த வேண்டும்.

ஆர்ப்பாட்டங்களில் கவனத்தைச் செலுத்துவதன் காரணமாக வளர்ச்சிப் பணிகளை அமுல் நடத்துவதில் தி. மு. க பின்னிற்கக் கூடாது. பின்னிற்கவும் முடியாது.

இதன் கருத்து போபேர்ஸ் பேர ஊழல், பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகச் சட்டம் ஆகியன பற்றிய கொள்கையை தி. மு. க மாற்றப் போகிறது என்பது அல்ல.

தேசிய முன்னணியில் தி. மு. க தொடர்ந்து அங்கம் வகிக்கும்; ஆனுல் தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தி. மு. க ஏற்றுக் கொள்ளாது. வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. க தனியான தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிடும்; அதன் கீழ்தான் போட்டியிடும்.

தேசிய முன்னணி அதிகாரத்துக்கு வந்தால் தி மு க அமைச்சர் பதவியை ஏற்குமா? என்ற கேள்விக்கு நான்



ராஜீவ் காந்தி

பதில் சொல்ல முடியாது.

இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் கூட்டோ, தொகுதி உடன்பாடோ எதையும் தி. மு. க வைத்துக் கொள்ளாது.

தி. மு. கவுடன் தேர்தல் கூட்டு வைப்பது பற்றி புதுடில்லியில் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் அக்கறை கொண்டிருப்பதாக அமைச்சர் மனேகரன் கூறியிருக்கிறூர்.

திரு. மனேகரன் நீண்ட காலமாக எம். பியாக இருந்தவர்.

மத்திய அமைச்சர்கள் சிலர் அவரின் நெருங்கிய நண்பர்கள். ஆகவே அவர்களில் சிலர் தங்கள் கருத்துக்களை திரு. மனேகரனிடம் தெரிவித்து இருக்கலாம்.

இப்படி திரு. கருணுநிதி சொன்ஞர். (எ)

## கருணுநிதியின் 'ஏஜண்ட்' மூப்பனுர் சென்னையில் சுவரொட்டிப் போர்!

சென்னை நகரில் சுவரொட்டிப்பிரசாரம் ஆரம்பமாகி உள்ளது.

கருணுநிதியின் 'ஏஜெண்ட்' ஆக மூப்பனுர் செயல்படுகிறூர் என்று கூறும் சுவரொட்டிகள் சென்னை நகரின் பல இடங்களில் நேற்று முன்தினம் காணப்பட்டன.

தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் கூட்டுக்காக மூப்பனுர் பின்னணியில் நின்று செயல்படுவதாகவும் சில சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தன.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவன் சுவரிலும் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

சத்தியமூர்த்தி பவனில் இருந்த காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியை செய்தியாளர்கள் அணுகி மூப்பனுர் எதிர்ப்புச் சுவரொட்டி பற்றிக் கேட்டனர்.

பவனுக்கு இப்படியான பிரசாரத்தை அனுமதிக்கப் போவதில்லை என்று கூறிய திரு. இராமமூர்த்தி சுவரொட்டியை அகற்றும்படி உத்தரவிட்டார்.

ஆனுல் சத்தியமூர்த்தி பவனுக்குள் பிரவேசிக்கும்போது திரு. ராமமூர்த்தியின் கண்ணுக்கு இச்சுவரொட்டி தென்படவில்லையா? என்பது குறித்து செய்தியாளர்கள் ஆச்சரியம் தெரிவித்தனர். (எ)

## தேசிய முன்னணியில் இருந்து கருணுநிதி விலகுவார்?

### காங்கிரஸ்தலைவர் சென்னையில்தகவல்

சென்னை, செப். 10

தேசிய முன்னணியில் இருந்து விலகுவதற்கான முதல் ஒத்திகையை முதலமைச்சர் கருணுநிதி நடத்தியிருக்கிறூர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று முன்தினம் சென்னையில் தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தி பதவி விலக வேண்டும் என்று கோருவதற்குப் பதில் அவருக்கு எதிராக பிரசார யுத்தம் ஒன்றை நடத்த வேண்டும் என்று திரு. கருணுநிதி தேசிய முன்னணிக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறூர்.

இதற்காக கருணுநிதிக்கு நன்றி கூறுகின்றேன் என்று திரு. ராமமூர்த்தி சொன்ஞர். (எ)

## தமிழ்நாட்டில் படப்பிடிப்புக்கள் மீண்டும் ஆரம்பம்

சென்னை செப் 10

தமிழ் நாட்டில் கடந்த ஐம்பது நாட்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டபடப்பிடிப்புக்கள் சென்ற வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகின.

சம்பள உயர்வு காரணமாக தயாரிப்பாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக படப்பிடிப்புக்கள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

பிரச்சனைக்குத் தீர்வு காண மத்தியஸ்தக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

## வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறது

## அ.தி.மு.கவின் நிலைபற்றி ஆலடி அருணு வர்ணனை

சென்னை, செப். 10

சென்னை சேப்பாக்கத்தில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் முன்னுள் எம். பி. ஆலடி அருணு பேசினுர்.

அ. தி. மு. க. வில் இருந்து விலகி தி. மு. க. வில் மீண்டும் சேர்ந்து கொண்ட பின்னர் ஆலடி அருணு பேசிய முதலாவது பொதுக்கூட்டம் இதுவாகும்.

ஆலடி அருணு தனது பேச்சில் சொன்னதாவது:

நடிகை நாட்டை ஏமாற்ற முடியாது. மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள். இதனுல் நடிகை குழம்பியிருக்கிறூர். குமுறுகிறூர்.

அண்ணு வீரப்பனை மூன்றும் இடத்திற்கு தள்ளி வைத்து விட்டார்கள். இவருக்கு இந்த அவமானம், தலைகுனிவு வேண்டுமா?

ஏன் அ. தி. மு. க. வில் சேர்ந்தீர்கள் என்று வீரப்பனை நான் கேட்டேன்.

அதற்கு அவர், "ஜெயலலிதா அண்ணன் அழைத்தார் என்று அழைக்கிறூர். இணைப் பொதுச்செயலாளர் பதவி தந்திருக்கிறூர்" என்று கூறினுர்.

பூலான்தேவி என்றவர்கள் இப்போது பூமாதேவி என்கிறூர்கள்.

வசந்தசேனை என்றவர்கள் பட்டத்துராணி என்கிறூர்கள்.

தெருமகள் என்று கண்டித்தவர்கள் இன்று திருமகள் என்று வாழ்த்துகிறூர்கள்.

ஜெயலலிதாவை பராசக்தி வடிவில் பார்ப்பதாகச் சொன்ன வீரப்பன் இன்று மூன்றுவது இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டார்.

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறது வீரப்பனுக்கு பதவி வந்ததும் தெரியவில்லை. போனதும் தெரியவில்லை! கொடுத்தவளே எடுத்துக்கொண்டாளடி என்ற கோமளித்தனம் நடக்கிறது.

குரங்கு கையில் இருக்கும் பூமாலைக்கு சமமாகிவிட்டது அ. தி. மு. க. மாலை யார் கழுத்திலும் விழாது. பூமாலையை பிய்க்கும் வேலை அ. தி. மு. க. வில் ஆரம்பமாகிவிட்டது.

இப்படி ஆலடி அருணு சொன்ஞர். (எ)

## பெனுஸிரைக் கவிழ்க்கும் சதி முயற்சி முறியடிப்பு!

லண்டன், செப். 10

பாகிஸ்தானில் பெனுஸிர் அரசைக்கவிழ்க்கும் சதி முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டது.

இது தொடர்பாக ராணுவ அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டனர் என்று பினுன்சியல் டைம்ஸ் பத்திரிகையின் இஸ்லாமபாத் செய்தியாளர் அறிவித்திருக்கிறூர்.

இஸ்லாமபாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கொடுத்த துப்பு ஒன்றைத் தொடர்ந்தே சதி முயற்சி முறியடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மேஜர்ஜெனரல் அந்தஸ்தில் உள்ளவர்.

இராணுவத்தில் தனக்கு பாதக நிலைமை காணப்பட்டதைத் தொடர்ந்து கடந்த மாதத்தில் இருந்து வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதை பெனுஸிர் பூட்டோ ரத்துச் செய்து இருந்தார்.



## திரேசாவுக்கு சத்திர சிகிச்சை

நோபல் பரிசுபெற்ற அன்னை திரேசாவுக்கு நேற்று கல்கத்தா மருத்துவமனை ஒன்றில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

79 வயதான அன்னையார் அதன்பின்னர் நன்கு தேறி வருவதாக அறிவிக்கப்பட்டது.

மூச்சுத்திணறல், கடுங்காய்ச்சல் காரணமாக அவர் சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (எ)

## ஆப்கன் நிலைமை

சோவியத்தில் இருந்து உணவுப் பொருட்களுடன் புறப்பட்ட வாகன அணி ஒன்று காபூல் வந்துசேர்வதில் சுணக்கம் ஏற்பட்டிருப்பதாக ஆப்கன் துணைப்பிரதமர் அறிவித்தார்.

கெரில்லாக்களின் தாக்குதல் காரணமாக கந்தஹார் நகரை வாகன அணி வந்தடையமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

## அஸாமில் 12 பேர் மரணம்

கௌஹாத்தி செப் 10

அஸாம் மாநிலத்தில் கோதாப்பூர் மாவட்டத்தில் போடோ தீவிரவாதிகள் கிராமம் ஒன்றிற்குள் புகுந்து நடத்திய தாக்குதலில் 12பேர் கொல்லப்பட்டனர்.

வாட்களால் வெட்டப்பட்டதினுல் இவர்கள் உயிரிழந்தனர். (எ)

## போலந்து அமைச்சரவை; சொலிடாரிட்டிக்கு 10 இடம்!

வார்ஸோ செப் 10

போலந்து பிரதமர் ரேடஸ் மஸோவிக்கி தனது அமைச்சரவையை அறிவித்தார்.

சொலிடாரிட்டிக் கட்சியின் பத்து உறுப்பினர்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயிகள் கட்சி ஆகியவற்றின் தலா 4 உறுப்பினர்களும் ஜனநாயகக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும் அமைச்சரவையில் இடம் பெறுகின்றன.

சொலிடாரிட்டி அமைச்சர்களிடம் வெளியுறவு நிதி வர்த்தொழில் தொழிலாளர் கல்வி ஆகிய அமைச்சுக்கள் இருக்கும்.

கம்யூனிஸ் அமைச்சர்களிடம் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் போக்குவரத்து வெளிநாட்டு வர்த்தகம் ஆகியன இருக்கும். (எ)

## பொக்கட் டெலிபோன்

பாரிஸ், செப். 10

உலகின் முதலாவது 'பொக்கட் டெலிபோனை பிரெஞ்சு நாட்டில் உள்ள மெகலெக் எலக்ரோனிக் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

விரைவில் இந்த டெலிபோன் விற்பனைக்கு வர உள்ளது.

இந்த டெலிபோன் சிகரெட் பக்கட் அளவிலானது 190 கிறம் எடை கொண்ட இந்த டெலிபோனை மடித்து சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு செல்லலாம்.

வேறு எட்டு பொக்கட் டெலிபோன்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய சந்தி வாய்ந்தது இது.

நினைவாற்றல், சத்தக்கட்டுப்பாடு, கல்குலேட்டர், அலாரம் ஆகியனவும் இந்த டெலிபோனில் பொருத்தப்பட்டுள்ளன. (எ)

## கர்நாடக நிலைமை

கர்நாடகத்தில் ஆளுனர் ஆட்சி முடிவடைய இன்னும் 42 நாட்களே உள்ளன.

இந்த நிலையில் ஆளுநர் ஆட்சியை நீடிப்பதுபற்றி மத்திய அரசுக்கு தான் சிபாரிசு செய்யவில்லை என்று கர்நாடக ஆளுநர் பி. வெங்கடசுப்பையா தெரிவித்தார். (எ)

# சிங்கப்பூரில் அமெரிக்க இராணுவத் தளம்;

# மலாய் தேசிய வாதத்துக்கு எதிரான முயற்சி!

பிரிட்டனிடமிருந்து 1959 இல் சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றது.

1963 இல் மலேசிய சம்மேளனத்தில் சிங்கப்பூர் இணைந்தது.

மலாய் இனத்தவர்க்கும் சீன இனத்தவர்க்குமிடையே ஏற்பட்ட பதற்றத்தைத் தொடர்ந்து மலேசிய சம்மேளனத்தில் இருந்து சிங்கப்பூர் இரண்டு ஆண்டுகளின் பின்னர் விலகிக்கொண்டது.

சிங்கப்பூரின் சனத்தொகை 25 லட்சம் ஆகும். பெரும்பான்மையினர் சீன இனத்தவர்.

சிங்கப்பூரின் பெரிய அயல் நாடுகள் இந்தோனேசியாவும் மலேசியாவும் ஆகும் இரு நாடுகளிலும் மொத்தமாக 20 கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் மலாய் இனத்தவராவர்.

கடந்த மாதம் அமெரிக்கத் தளம் அமைக்க இடமளிக்கப் போவதாக சிங்கப்பூர் அறிவித்தது.

இது அயல் நாடுகளான மலேசியாவிலும் இந்தோனேசியாவிலும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தின.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சோவியத் பிரசன்னத்துக்கு பதில் நடவடிக்கையாகவே அமெரிக்கத் தளங்கள் அமைக்க சிங்கப்பூர் இடங்கொடுப்பதாக இந்த இரு நாடுகள் கருதுகின்றன.

சிங்கப்பூருக்கு எங்கிருந்து என்று கூறப்படுகிறது.

மலேசிய இனத்தவரின் மத்தியில் சீன வம்சாவழியினர் ஆளும் நாடாக சின்னஞ்சிறிய சிங்கப்பூர் விளங்குகின்றது.

"எம்முடன் தகராறு பண்ணுதே; எம் பின்னுல் அமெரிக்கர்கள் இருக்கிறூர்கள்"— என்று சொல்லாமல் சொல்லும் பாணியையே சிங்கப்பூர் கடைப்பிடிப்பதாக மலேசிய அரசு அதிகாரி ஒருவர் சொன்ஞர்.

சிங்கப்பூரில் வசிப்பவர்களில் 15 சதவீதத்தினர் மலேசியர்.

### ஒரு கண்ணேட்டம்

பயமுறுத்தல் வருகின்றது? இக்கேள்வியை மலேசியாவின் முன்னுள் பாதுகாப்பு அமைச்சரும் ஆளுங்கட்சி உபதலைவருமான அப்துல்லா அஹ்மத் பாடாவி கேட்டிருக்கிறூர்.

இஸ்லாம் அல்லது மலாய் தேசிய வாதத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையாக சிங்கப்பூரின் நடவடிக்கை அமைந்துள்ளதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

சிங்கப்பூரிடம் 155 போர் விமானங்கள் உள்ளன.

மலேசியா — இந்தோனேஷியா ஆகிய நாடுகள் வைத்திருக்கும் போர் விமானங்களிலும் பார்க்க இது அதிகம்

இதனுல் மலேசிய நகரட்டரின் செல்வாக்கு சிங்கப்பூரில் தெரிகிறது.

சிங்கப்பூருக்கு விசுவாசமாக அங்கு வாழும் மலேசியர் இருக்கின்றனரா? என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

இது கால வரை மலேசிய —சிங்கப்பூர் தலைவர்கள் வேற்றுமைகளை மூடிமறைத்து வந்தனர்.

ஆனுல் இரு நாடுகளிலும் உள்ள தற்போதைய சந்ததியினர் அம்மாதிரியான நல்லெண்ணப் போக்கை தொடர்ந்து அனுசரிப்பரா? என்பது கேள்விக்குறியாக வரும்?

அங்கத்துவம் பெறுதல்

மக்கள் நலன்காக்கும் பிரிவு

கோப்பாய்

வலிகிழக்குப் பிரதேசசபை - கோப்பாய் உபஅலுவலக எல்லைப்பரப்பிற்குள் வதியும் அல்லது தொழில் புரியும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் அங்கத்துவம்பெறத் தகுதியுடையவராவர்.

சாதாரண அங்கத்துவம் — பிரவேசப்பணம் 10/- மாதச்சந்தா 2/-

ஆயுட்கால அங்கத்துவம் - ஒரே தடவையில் மட்டும் 120/-

அங்கத்தவர்கள் அடையக்கூடிய நன்மைகள், அமைப்பின் தொழிற்பாடுகள், மற்றும் விவரங்களுக்கு அலுவலகத்தில் ஞாயிறு தவிர்ந்த நாட்களில் காலை 9-00 மணிமுதல் நண்பகல் 12-00 மணிவரை தொடர்பு கொள்ளவும்;

தலைமை அலுவலகம்
பருத்தித்துறை வீதி
இருபாலைச் சந்தி

கா. கணேசலிங்கம்
பொதுச்செயலாளர்
(பொதுச்சபை சார்பில்)

(2307)

உங்கள் சகல ஜெனரேற்றர் தேவைகளுக்கும்



2500 KVA வரை மின்சக்தியை அளிக்கும் ஜெனரேற்றர்கள் சர்வதேசப்புகழ் பெற்ற லிஸ்டர், பேர்க்கின்ஸ், கம்மின்ஸ், வோல்வோ, டோர்மன் 'டொய்ஷ் என்ஜின் களுடன்' இணைந்தியங்கக்கூடிய நியூஎஜ் / மார்க்கொன், லெரோய், சோமர் மாற்றிகளுடன் (Al ternators) எங்களிடம் கிடைக்கும்.

உங்கள் மின்சக்தித் தேவைகளைச் சிறப்புற மதிப்பீடு செய்தலும், பொருத்தமான மின் உபகரணங்களைத் தெரிவு செய்து பாவனைக்கு அளித்தலுமே எமது நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

உங்கள் ஜெனரேற்றர்களை CAL இலிருந்து வாங்கும் போது மதிநுட்பம் மிக்க தொழில் நுட்பக் குழுவினரின் சேவையும் தட்டுப்பாடில்லாத உதிரிப்பாகக் கிடைப்பனவுகளும் உறுதியளிக்கப்படுகிறது.

தொடர்பு கொள்க:-

CAL கொழும்பு ஏஜென்ஸீஸ் லிமிற்றெட்
(இயந்திர வியல் விற்பனை சேவைப்பிரிவு)
300 - 304 காலி வீதி கொழும்பு - 3 தொலை பேசி:- 573551/2, 575395/6/7
CAL உங்கள் நம்பிக்கைக்குரிய மின்சக்தி நிபுணர்கள்.

Mel Ads 10843

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**C. S. K. விசேஷ தசாங்கம்**

இது சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது
இத்தசாங்கம் கோவில்களிலும்
வீடுகளிலும் விசேடங்களிலும்
குழந்தைகளுக்கும் புகை போடச் சிறந்தது.

1 சிறிய பைக்கற் விலை 5/-
1 பெரிய பைக்கற் விலை 10/

கிடைக்குமிடம்
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

11 - 09 - 1989 திங்கட்கிழமை

**C. S. K. நோஎண்ணெய்**

இந்த எண்ணெ சகலவித நோவுகளுக்கும்
குத்து உளைவு வீக்கம், கை, கால்
களுக்கு போன்ற ரோகங்களுக்கும்
அந்தந்த இடத்தில் பூசி வர
குணமாகும்

1 அவுன்ஸ் விலை 12/-

கிடைக்குமிடம்
க. செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துக்கடை, யாழ்ப்பாணம்.

### கொக்குவிலில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் தலையாட்டி முன்னால் நிறுத்தப்பட்டனர்; அப்போது இரு இளம்பெண்கள் உட்பட இலர் விசாரணைக்காக கூட்டிச்செல்லப்பட்டனர் என்று சொல்லப்பட்டது:

இத்தேடுதல் நடவடிக்கையின் போது கொக்குவில் சந்தியில் இருந்து பூநாறிமரத்தடி வரை போக்குவரத்து தடை செய்யப்பட்டது. (ஓ 3 51)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சின்னத்தப்பி மாணிக்கம்

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவிலில் வசித்தவருமான, பிரபல பழக்கடை வர்த்தகருமாகிய திரு சின்னத்தம்பி மாணிக்கம் 09- 09 1989 இல் காலமானார்:

[10- 09 89] இல் நடைபெற இருந்த தகனக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று (11- 09 89) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்,
ப. கார்த்திகேசு (மருமகன்)

கொக்குவில். [2143]

### மாரிமுத்து பார்வதி

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த மாரிமுத்து பார்வதி காலமானார் இவர் காலம் சென்ற மாரிமுத்துவின் மனைவியும் திருமதி அருள்மேரியின் அன்புத் தாயாரும் இளைப்பாறிய ஆசிரியர் மனுவேற்பிள்ளை அவர்களின் மாமியாரும் காலஞ்சென்ற சேதுப்பிள்ளை காலம் சென்ற சுப்பிரமணியபிள்ளை. காலம் சென்ற இராமநாதர், விசுவநாதர் (வட்டுக்கச்சி) கனகர் (செட்டிக்குளம்). நாகமுத்து (நெடுந்தீவு), ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி சரோஜா கணபதிப்பிள்ளை, (ஆசிரியை, மகா வித்தியாலயம் / நெடுந்தீவு), அன்னமலர், அருளானந்தம், மரியநாயகம், சேவியர், அன்னபாக்கியம், அன்ரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 11-09-89 மாலை நெடுந்தீவு கிழக்கு சேமக் காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச மனுவேற்பிள்ளை

நெடுந்தீவு:
[2311]

### நடராசா சசிதாசன்

நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகன் சசிதாசன் அகால மரணமானார்.

அன்னார் நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், கோமலதா, உதயலதா, சுவர்ணலதா, தெய்வம் ஆகியோரின் சகோதரரும், கார்த்திகேசு வெள்ளையப்பு, சின்னம்மா ஆகியோரின் பேரனும், தவராசா, சிவலிங்கம், தருமலிங்கம், உதயகுமார் (கனடா), வீமராசா ஆகியோரின் மருமகனும், சிவபாக்கியம், சோதிமலர், சுவதி, நாகேஸ்வரி, சிவகுமாரி (பாறெயின்), விக்கினேஸ்வரி, கமலதயாளினி, கலா, லலிதா, காலஞ்சென்ற மாணிக்கம், அரியராசா, முத்துலிங்கம், மனோகரன், இராசேந்திரம் (பாறெயின்), ஞானநடேசலிங்கம், சிவசுப்பிரமணியம், புலேந்திரராசா, சிவநேசன்; பேரின்பநாதன் (கனடா) ஆகியோரின் பெருமகனும் ஆவார்;

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 11-09 1989 திங்கட்கிழமை இன்று காலை 10-00 மணிக்கு கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
வே. தவராசா

மாதா கோவிலடி,
கோப்பாய் [1939]

### சந்தியாப்பிள்ளை ஏனெஸ்ற்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஐந்தாம்புலத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சந்தியாப்பிள்ளை ஏனெஸ்ட் 9-9 89 அகாலமரணமடைந்தார். இவர் காலம்சென்ற சந்தியாப்பிள்ளை அன்னம்மாவின் அன்பு மகனும், சவிரிமுத்து யோசப்பீனாவின் அன்பு மருமகனும் றஞ்சிதத்தின் அன்புக்கணவரும் மாஜி, அலெக்சனின் அன்புத்தந்தையும் வேவி (Vaby) அல்போன்ஸ், வேணுட், பங்கராஸ் பத்திராசா (ஜேர்மனி), ரஞ்சினி அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (11-9-89) திங்கட்கிழமை காலை 10. 00 மணியளவில் ஐந்தாம்புலவீதியில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்;

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்;

தகவல்: மனைவி

சரம்பொன் மேற்கு,
ஐந்தாம்புலம் வீதி,
ஊர்காவற்றுறை; [2312]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 828/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;

## புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திலும் கொள்ளை!

யாழ்ப்பாணம், செப். 11

புங்குடுதீவு கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் மூலஸ்தான விக்கிரகம் உட்பட மற்றைய மூர்த்திகளின் விக்கிரகங்களும் புரட்டப்பட்டுத் தங்க யந்திரத் தகடுகள் கொள்ளையிடப்பட்டுள்ளன:

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஆலயத்தின் கதவை உடைத்து உட்புகுந்தவர்கள் விக்கிரகங்களைப் புரட்டி தங்கத் தகடுகளை எடுத்துக்கொண்டு நகைகளையும், ஒலிபரப்புச் சாதனங்களையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாலயத்தில் கடந்த வாரம் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் கொள்ளையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது:

சில தினங்களுக்கு முன்னர் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது தெரிந்ததே: (ஓ-8)

## வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கு இன்றும் நாளையும் நிவாரணம்

வல்வெட்டித்துறை, செப் 11

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் நிவாரண உதவிகளை வழங்க உள்ளது.

சாவகச்சேரிப் பகுதிக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கு முதற்கட்டமாக செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இன்று திங்கட்கிழமை நிவாரணம் வழங்கப்படும். மொத்தம் 262 குடும்பங்களுக்கு மேற்படி நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அறியவந்தது:

ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும் அரிசி (ஆறு கிலோ), சீனி (ஒரு கிலோ), பயறு (ஒரு கிலோ], சத்துணவுமா (ஒரு கிலோ), தேயிலை (200 கிறும்) என்றவாறு வழங்கப்படும்.

நாளை செவ்வாய்க் கிழமை வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலையில் தங்கியிருக்கும் 97 குடும்பங்களுக்கு மாம்பழம் சந்தியில் வைத்து நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே குரும்பசிட்டிக்கு இடம்பெயர்ந்த 34 குடும்பங்களுக்கும் கட்டுவனுக்கு குடிபெயர்ந்த 124 குடும்பங்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அந்தந்த இடங்களில் வைத்து நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு உணவுப் பொட்டலங்களின் பெறுமதி 175ரூபாவாகும். இது ஒரு வாரத்திற்குரிய நிவாரணம் என்று செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-160)

## முத்திரை தட்டுப்பாட்டை தவிர்க்க தொழிற்சங்கம் யோசனை

யாழ்ப்பாணம், செப் 11

யாழ் மாவட்டத்தில் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, தபாலகங்களில் போதுமான அளவு முத்திரைகளை வைத்திருக்க வகைசெய்யும் விதத்தில் இருப்புப் பெறுமதியை நாற்பது சத வீதத்தால் அதிகரிக்க வேண்டும்:

தபால் தந்தித்துறை அமைச்சரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது;

கடந்த காலங்களில், தபால் அலுவலகங்களில் இடம்பெற்ற கொள்ளைகள் காரணமாக தபாலகத்தில் வைத்திருக்க வேண்டிய முத்திரையின் பெறுமதி குறைக்கப்பட்டது;

இக் குறைப்புக் காரணமாக முத்திரைக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது;

தற்சமயம் சுமுக நிலை திரும்பியுள்ளதால் முத்திரை இருப்பு பெறுமதியை 40 சத வீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்று தபால் அமைச்சரை அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் யாழ். கிளை கோரி உள்ளது. [அ-3]

## புதிதாக அனுமதி கிடைத்த பல்கலைக்கழக மாணவருக்கு அக்டோபரில் தெரிவுக்கடிதம்

கொழும்பு, செப் 11

பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவருக்கான தெரிவுக் கடிதம் அடுத்த மாதம் முற்பகுதியில் மாணவர்களுக்கு அனுப்பப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ சி ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலேயே மாணவர் தெரிவு இடம்பெறுகின்றது:

இவ்வருடம் சுமார் ஆறாயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்,

இவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நவம்பரில் ஆரம்பமாகும்; (ஓ-எ)

## அந்திமக் கிரியை அழைப்பு

சென்ற 04- 09-1989 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் திருமதி ராஜலட்சுமி சோமசுந்தரஐயர் அவர்களின் அந்திமக்கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்

13- 09- 1989 புதன்கிழமை காலை 10 மணி - (தசாகம்)
14- 09- 1989 வியாழக்கிழமை - (ஏகோதிஷ்டம்)
15- 09- 1989 வெள்ளிக்கிழமை - (சபிண்டீகரணம்]
(இரசயக்ஞம்)

இங்ஙனம்:
சோதிடர் சோ ரங்கநாத ஐயர் (நுணுவில்)
சோ கிருஷ்ணமூர்த்தி ஐயர் (கந்தப்பளை)

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி. [2142]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின்சார சபை முகாமையாளருக்கு கூடுதல் அதிகாரம்

யாழ்ப்பாணம், செப். 11

மின்சாரசபையின் மாகாணப் பொது முகாமையாளர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாகாணத்துக்கு உட்பட்ட வேலைகளை உடனுக்குடன் மேற்கொள்ளும் வகையில் எடுக்க வேண்டிய முடிவுகளை மாகாணப் பொது முகாமையாளர்கள் இனி மேற்கொள்ள முடியும்.

தலைமையகத்துடன் தொடர்புகொண்டு காலத்தை விரயம் செய்யாது உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவே கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக எரிபொருள் மின்சக்தி அமைச்சர் திரு பெண்டர் பெரேரா தெரிவித்தார்; [ஓ 3]

### இளைஞன் தற்கொலை!

யாழ்ப்பாணம், செப் 11

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தி முகாம் ஒன்றைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்:

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மரணமானவர் குடிமக்கள் தொண்டர் படையைச் சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டது; (ஓ-76)

### இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப்: 11

தேவாலயத்துக்குச் சென்று விட்டுத் திரும்பிய இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்;

நேற்றுக்காலை 8-45 மணியளவில் நுணுவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது:

காயமடைந்தவர் சுப்பிரமணியம் நிமல்ராஜ் [வயது18] என்பவர் ஆவார்; இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-10)

### தென்பகுதி சம்பவங்கள்

கொழும்பு, செப்: 11

தென்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சில சம்பவங்கள் வருமாறு:-

★ பேராதனை நகரில் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 5 பேரைச்சுட்டுக்கொன்றனர்

★ களுத்துறை மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர்:

★ ஒரு பொலிஸ்காரரும் ஒரு பெண்ணும் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஓ-எ)

### ஜனநாயக.-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி(

சகல உரிமைகளையும் அடைகின்றார். தேர்தல் முடிவடைந்ததும் தோல்வி கண்ட வேட்பாளரின் ஜனநாயக உரிமைகள் மறந்துவிடப்படுகின்றன.

ஏனைய ஜனநாயக நாடுகளைப் போல் அல்லாது இங்கு தேர்தலில் தோல்வி அடையும் ஒருவர் வாழ்க்கை, தொழில், சுபீட்சம் என்பனவற்றை மட்டுமல்லாது, சிவில் உரிமைகளையும் இழந்து விடுகின்றார்;

நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்;

"நீங்கள் சிக்கலான நிலையில் இருக்கின்றீர்கள்" — என்று அரசாங்கத்தை எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுவது சரியல்ல;

நாட்டை ஜனநாயக விரோத சக்திகளுக்கு இழந்து விடுவதைப் பார்க்கிலும் இரு தரப்பினரும் இணைந்து பிரச்சினைகளை வென்றெடுப்பது முக்கியமானதாகும்" -இப்படி அமைச்சர் அத்துலத்முதலி சொன்னார்; (ஓ-எ)

## தேயிலை, றப்பர் ஆலைகள் களுத்துறையில் தீக்கிரை

கொழும்பு, செப்: 11

களுத்துறை மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை நான்கு தொழிற்சாலைகள் இனந்தெரியாத நபர்களால் எரிக்கப்பட்டன:

அவற்றில் மூன்று றப்பர் தொழிற்சாலைகள், ஒன்று தேயிலைத் தொழிற்சாலை ஆகும்:

நான்கும் பூரணமாக எரிக்கப்பட்டுவிட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்; (ஓ-எ)

### டிச. 31ற்கு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது:

இந்த இணக்க நிலைக்கு இலங்கை ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்தால் படைவாபஸ் பற்றிய நேர அட்டவணையை இரு நாட்டுப் பிரதிநிதிகளும் பேசித் தயாரித்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது:

படைவாபஸ் வாராந்த அடிப்படையில் அல்லது—

இரு வாரங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் அல்லது—

மாதத்திற்கு இவ்வளவு துருப்புக்கள் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது;

இதே வேளை பெல்கிறேட்டில் காணப்பட்ட இணக்க நிலை பற்றிய விவரங்களை, நாடு திரும்பிய அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாஸாவிடம் எடுத்து விளக்கியதாகக் கூறப்படுகிறது.

இந்த இணக்கம் குறித்து ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என்பது நேற்று இரவு வரை வெளியிடப்படவில்லை:

இதே சமயம் புதிய இணக்கத்திற்கு இலங்கை ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்தால்—

இந்திய அமைதிப்படை யுத்த நிறுத்த அறிவிப்பு ஒன்றை விடுக்கும் என்றும்—

இந்த யுத்த நிறுத்தத்திற்கு சகல தரப்பினரும் மதிப்பளிப்பார்கள் என்று இந்தியா நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டது: (உ-1)

### எரிபொருள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினம் காங்கேசன்துறை வந்த அமைச்சர் பெஸ்டஸ் தெரிவித்தார்;

இவ்விடயம் குறித்து உடனடியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடபிரதேச பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளரை அமைச்சர் பணித்துள்ளார்; (ஓ-68)

### இன்று--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை மேற்கொள்ள உள்ளனர்;

இவர்கள் யாழ்-மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தலைமையில் கூடி ஆலோசனைகளை மேற்கொள்ள உள்ளனர்:

இந்த குழுவினர் யாழ்-அரச அதிபர், அமைதிப்படை அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து இதுபற்றி பேச்சுக்களை நடத்துவர் என அறிய வருகிறது; (அ-9)

### புதனன்று கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 11

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள், ஆசிரியர்களின் கூட்டம் ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது:

புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மகாத்மா காந்தி வீதியிலுள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணக் காரியாலயத்திற்கு தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களையும், முழுநேர, பகுதி நேர ஆசிரியர்களையும் வருமாறு வடக்கு-கிழக்கு மாகாண யாழ் மாவட்ட உறுப்பினர் திரு; கே: இரவீந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்;

### இளைஞரின் சடலம்

தலை பிளந்த நிலையில் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் சடலமாக கிடக்கக் காணப்பட்டார்;

சாரமும் - சேட்டும் அணிந்திருந்த மேற்படி இளைஞரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்: ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது;

நேற்று மாலைவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை: (அ-10]

### தூக்குத்தண்-----

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெயரில் அமைப்பு ஒன்றை இவர்கள் உருவாக்கியுள்ளார்கள்;

இந்த விஷயத்தில் தலையிட்டு மன்னிப்பு வழங்க உதவுமாறு கோரும் தந்திகளை பிரஸ்தாப குழு மாலைதீவு ஜனாதிபதிக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ளது;

இக்குழு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளதுடன் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆதரவையும் பெற்றுள்ளது;

சர்வதேச மன்னிப்புச் சபை தனது 15-08-1989 ஆம் திகதிய 306 ஆம் இலக்க அவசர அறிக்கை மூலம் 16 பேருக்கும் வழங்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச் செய்து மன்னிப்பு வழங்குமாறு மாலைதீவு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது;

ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி பலருக்கு மன்னிப்பு வழங்கியதையும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக் காட்டி உள்ளது;

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி மாலைதீவில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றின்போது இந்தியப் படைகளால் கைது செய்யப்பட்ட மேற்கூறிய 16 பேருக்கும் அண்மையில் மாலைதீவு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதிப்பதாக அறிவித்திருந்தது தெரிந்ததே; (அ-5)

தேரேறும் தேவியைப் போற்றிடுவோம்!
தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில்

**இலங்கை வங்கியின்**

**இரண்டாவது கருமபீடம்**

சேமிப்புச் சான்றிதழ் விற்பனை, சிறுவர் சேமிப்புக் கணக்கு, சாதாரண சேமிப்புக் கணக்கு ஆகியவற்றை ஆரம்பிக்க நாளை செவ்வாய்க்கிழமை வரை. காலை 9மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொள்ளலாம்;